
தமிழ் மொழியின் முதல் அச்சுப் புத்தகம்



தமிழ் நாடன்

தமிழ் மொழியின் முதல் அச்சுப் புத்தகம்

தமிழ் மொழியின் முதல் அச்சுப் புத்தகம்

தமிழ்நாடன்

Regd No. 88/1975

சேலம் மாவட்ட ஓவியர் எழுத்தாளர் மன்றம்
Salem District Contemporary
Painters & Writers Association
சேலம் 636 006

பதிப்பு:
லவ்.ஓ. ஏ.கே. நாகராஜன்
சேலம்

தமிழ் மொழியின் முதல் அச்சுப் புத்தகம்

தமிழ்நாடன்

First Prrinted BOOk in Tamil

THAMIZH NAADAN
1995

எட்டாம் உலகத் தமிழ் மாநாடு
தஞ்சாவூர் 1995
நினைவுப் பதிப்பு
திரு லவ். ஓ. ஏ.கே. நாகராஜன், சேலம்

This book publication is
Sponsored by

Thiru. Love O AK Nagarajan Salem
in memory of
Eighth World Tamil Conference
Thanjavur
1995

Printed at : Classic Graphics. Madras.

முகவுரை

மனிதனின் முன்னேற்றம் 1. காலத்தை வெல்லுதலும், 2. தூரத்தை வெல்லுதலும். அப்படி இரண்டையும் வெல்ல முயற்சித்த முதற் கருவி சக்கரம். அடுத்ததாய் அச்சு.

● 'அச்சு' - புதுமை, புரட்சி, தொழில் நுட்பம். ஒரு 'மீடியா', ஒரு கலை - இவையும் இன்னும் பலவும்.

● தமிழகத்தில் அதிகம் அச்சிடப்பட்ட நூல்களில் தம்பிரான் வணக்கமும் ஒன்று. அது முதலிடத்தில் நின்றாலும் ஆச்சரியப்படுதற்கில்லை. காரணம், அனைத்து திருச்சபைகளும், கிறித்துவம் கற்போர்க்கு முதல் நூலாக இந்நூலைத்தான் அறிமுகப்படுத்துகின்றன. ஒவ்வொரு சபையும், இக்கருத்துகளின் வரிசையை சற்றே மாற்றுகின்றன. தத்தமக்கு ஒரு மொழியாக்க நடையை கையாள்கின்றன. மற்றபடி ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டு காலமாய் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வரும் நூல் இது. உலக மொழிகளில் பைபிள் தான் அதிகமான மொழிகளில், அதிகமான இடங்களில், அதிக முறை, அதிகமான எண்ணிக்கை அச்சிடப்பட்ட நூல் என்பது வரலாற்றுப் பதிவு. பழைய ஏற்பாடு மிகப் பெரிது. புதிய ஏற்பாடு ஒரு பிரிவினர்க்கே உரியது. ஆனால், கிறிஸ்துவின் கோட்பாடு (Doctrines of Christ) ஏறத்தாழ அனைத்து பிரிவினரும் ஏற்றுக் கொள்வது. ஆதலால் பெரிய முழு நூல்களைவிட எளிமை, பயன் கருதி இச்சிறு நூலே அதிகம் அச்சாகி இருக்கும்.

● இந்திய மொழியின் பலவற்றிலும், கிறிஸ்துவின் கோட்பாடு அல்லது பைபிள் தான் முதல் முதலாக அச்சாயிற்று. ஒருசில மொழியில் மட்டுமே மொழி இலக்கணம், சொற்களஞ்சியம் கதை அச்சாயின. இந்திய மொழிகளின் முதல் நாவல்களில் முதல் அச்சு நூலின் பிரதிபலிப்பு காணலாம். கால வரிசையில் முதலிடம் பெறும் யமுனா பாரியாதன் (1857 மராத்தி) போன்ற இந்திய நாவல்கள் இப்படி சொல்லத் தக்கவை. தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தில்

(1878) பத்துகட்டளைகள் மற்றும் பெரும்பாவங்கள் இடம் பெறுகின்றன. வேதநாயகம் பத்துக் கட்டளையின் ஒவ்வொரு கட்டளைக்கும் ஒரு அத்தியாயம் திட்டமிட்டு விவரித்துள்ளார். உதாரணத்திற்கு விபச்சாரம் செய்யாதிருப்பாயாக எனும் கட்டளையே, பிரதாப முதலியார் சரித்திரத்தின் எட்டாவது அதிகாரம் கற்பலங்காரி கதை.

● ஆண்டிறிக்கு பாதிரி இறந்து போனதும் ஊரெல்லாம், அக்கம் பக்கம் ஊரெல்லாம் தம் வீட்டுப் பெரியவர் இறந்தார் போல துக்கம் - கிறித்துவர் என்றில்லை - நேர் எதிராக இஸ்லாம் சமூகத்தினரும், இந்துக்களும் கூட.

வாள் முனையில் மக்களை மதம் மாற்ற விரும்பிய மன்னர்கள் காலம் தமிழ் முதல் அச்சு நூலைப் பதிப்பித்த, தான் சாகும் வரை தமிழுக்கே தொண்டுபுரிந்த அண்டிறிக்கி, அச்சுத் தாள்களால் மக்களின் மனம் மாற்றினார். மக்களின் ஒற்றுமைக்கான, மன ஒருமைப் பாட்டுக்கான சாதனங்கள் வெகு சிலவே. அதில் தலையாயது அச்சு என்பதற்கு வரலாறு காட்டும் சிறு நிரூபணம் இது.

● தம்பிரான் வணக்கம் நூலச்சுக்கு கடற்கரை பரவ மக்களும் நிதி அளித்தார்கள். மதத்தின் பேரில் ஆன விசுவாசம் மாத்திரம் இதற்குக் காரணம் அல்ல. எழுத்து அறிவும் வேட்கையும் ஒரு காரணம். எழுத்தறிவில் கேரளக்கரை மக்கள் இந்திய நாட்டில் முதல்வர்களாக விளங்குவதற்கு தம்பிரான் வணக்கமே முதற்பாடம்.

தொடக்ககாலம் அச்செழுத்து அறிந்தவர் அனைவருமே கிறித்துவர்கள் அல்லர். அல்லாதாரும் நிறைய. அம்மக்களின் பெருந்தொகை விரிவாக்கமே, இந்திய நாடு பெருமை கொள்ளும்படியாக விளங்கும் கேரள மாநில மக்களின் முழுக் கல்வி அறிவு அண்டிறிக்கி, அப்படி அறிவொளி தீபத்தின் தாய்நெருப்பு.

● எத்தகைய புதுமையும் மரபின் வரலாற்றிலிருந்தே உதயமாகிறது என்பதற்கு, தமிழ் முதல் அச்செழுத்து ஒரு உதாரணம். கல்வெட்டு, செப்பேடு ஓலைச் சுவடி இவற்றின் எழுத்து வடிவை தமிழ் முதல் அச்செழுத்தில் காணலாம்.

பொறிஞர் கொடுமுடி சண்முகம் தமிழ் எழுத்து வடிவச் சீர் மைக்கு, தம்பிரான் வணக்கத்தை முதற்சான்றாகக் கருதுகிறார். 'தம்பி ரானில்' அச்சு சாதனம் தமிழ் எழுத்துகளை, உருட்டிப் பிசைந்து புதிதாக்க முயன்றது தெரிகிறது. போலவே கம்ப்யூட்டர் கருவி தமிழ் எழுத்தை மாற்றியே தீரும் என்பார் அவர்.

தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்பது பலரது விருப்பம். 1975-ல் கூடிய புலவர் குழு லை, னா எழுத்துக்களை அங்கீகரித்தது. 1975 தமிழக அரசு எழுத்துச் சீர்தி ருத்த ஆணையிட்டு பெரியாரை கவுரவப்படுத்திற்று. ஆனால், 'ஐ' யைக் கொன்று 'அய்'யை இருத்த புலவர்கள் தயாராக இல்லை.

'உ'கர 'ஊ'காரங்களை புதிய வடிவில் என்பதுபோல எழுத வேண்டும் என்கிறார் பொறிஞர். அது காலத்தின் (அதாவது கம்ப் யூட்டரின்) கட்டாயமாம்.

கேரள அரசு 1971-ல் மலையாள எழுத்துச் சீர்திருத்தத்தை அமுல்படுத்திற்று. கொல்லத்தில் அச்சான தமிழ்ப் புதுமையைக் கொண்டாடும் தமிழர் எழுத்துச் சீர்திருத்தத்தில் அவர்களைப் பின்பற் றினால் என்ன? என்பது அவரது கேள்வி. இயந்திரத்தனமான 21-ம் நூற்றாண்டு என்சினியர்களுக்கு 'உயிரின்' வாதை தெரியுமா?

எப்படியோ நம் உடலை, உயிர் நாளை, உணவை, பண் பாட்டை, மாற்றித் தீர்க்கிற எந்திரம் நம் தமிழ் எழுத்தின் வரி வடி வத்தை மாற்றியே தீரும். தமிழின் தலை எழுத்து இதுவோ எனலாம். என்ன செய்ய? உலகின் எல்லா எழுத்துக்களுக்கும் விதி அதுவே.

● தமிழின் (ஒலிவடிவ) முதல் அச்சு நூலான லிஸ்பன் கார்ட்டி லாவை பாண்டிச்சேரி பிரெஞ்சு ஆய்வகம் மறுபதிப்பு வெளியிட்டுள் ளது. அதன் முயற்சியாளர் தமிழறிஞர் டாக்டர் பிலியோசா (Filliazat) தமிழ் மொழியின் முதல் அச்சு நூலான தம்பிரான் வணக்கம், கிரிசித் தியானி வணக்கம் இரண்டையும் தூத்துக்குடி தமிழ் இலக்கியக் கழ கம் வெளியிட்டுள்ளது (1963). பதிப்பாளர் பாதிரியார், எஸ். இராச மாணிக்கம், பேராசிரியர் புனித சேவியர் கல்லூரி, பாளையங்

கோட்டை. அண்டிறிக்குவின் மூன்றாவது நூலையும் (அடியார் வரலாறு Flos Sanctorum) பதிப்பித்தார் அவர்.

தமிழ் கலைக் களஞ்சியத்தில் (தொகுதி 10) அண்டிறிக்கி பாதிரி பற்றி அவர் எழுதிய கட்டுரையில் கன்பெசனேரியா இதுவரை கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டிருந்தார். அந்நூல் கிடைக்கப் பெற்றது. விவரங்கள் உள்ளே காண்க.

அறிஞர் பில்லியோசாவுக்கும் பாதிரியார் ராசமாணிக்கத்திற்கும் என் மரியாதை கலந்த அன்பினை படைக்கிறேன். அவர்களது மறுபதிப்புகளே, இன்று எளிதில் காணக் கிடைக்காத நூல்கள் ஆகிப் போயின.

- தம்பிரான் வணக்கத்தில் தமிழ் அல்லாத சொற்கள் பல. அவை. லத்தீன், போர்த்துகீசிய, ஆங்கில, சமஸ்கிருத் சொற்கள், சில சொற்கள் 16-ம் நூற்றாண்டின் மக்கள் தமிழ். அவற்றுக்கான உச்சரிப்போ பொருளோ தரப்பட்டுள்ள - சாய்வெழுத்தில்.

- 'தம்பிரான் வணக்கம்' நூலை கடந்த நாற்பது ஆண்டுகாலமாக சில கட்டுரைகள் வழியே தமிழர் அறிவர். ஆயின் அதனை எவரும் முழுதாக வெளிக்காட்டவில்லை. பழைய நூல், சுவையான செய்திகள் இல்லை. கிறித்துவ நூல் என்பவை அதன் காரணங்கள். ஆனால், தமிழ் செல்வங்களில் இது ஒன்று என்றே நாம் கவுரவித்து, கனப்படுத்தி இருக்க வேண்டும்.

இந்நூலாக்கத்தில் எனக்கு உதவிய என் நண்பர்கள சிலரை நினைவு கூர்வது அவசியம். திரு. வி. கேசரிநாதன், கல்வெட்டியல் அறிஞர் ஈரோடு எஸ். இராசு, சேலம் இளம் குருமடத்து பாதிரியார் திரு. இருதயச் செல்வம், மின் ஒப்பந்தக்காரர் திரு.ஆர். ராஜமாணிக்கம் ஆகியோர் எனக்களித்த ஊக்கமும் உதவியும் பெரிது. இந்நூல் விரைவாக அச்சுப் பெற உதவியவர் கலைவிமர்சகர் தோழர் இந்திரன்.

● தமிழ்ப் பல்கலைக் கழக நூலகத் துறைத் தலைவர் திரு. பத்மநாபன், ஹார்வேர்டு பல்கலைக் கழகத்து தம்பிரான் வணக்கத்தின் நகலொன்றை தேடிக் கொண்டு வந்துள்ளார். பெருமனதுடன் அதன் நகலொன்று அளித்து இம்முயற்சிக்கு உதவினார் அவர். அவருக்கும், தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கும் நன்றியுடையேன்.

● சேலம் மாவட்டம் நன்கறிந்த திரு லவ்-ஓ. ஏ.கே. நாகராஜன் இந்நூலைப் பதிப்பிக்கிறார். அவர்தம் தமிழ் உணர்வுக்கு என் அன்பும் நன்றியும்.

வெல்க தமிழ்!

அன்புடன்
தமிழ்நாடன்
1995

முகவுரை: தமிழ் முதல் அச்சு நூல்களில் (அண்டிறிக்கி பாதிரி) காணும் சொல்லாட்சி.

உள்ளே —

தமிழ் மொழியின் முதல் அச்சுப் புத்தகம்
தம்பிரான் வணக்கம்

1578 அக்டோபர் 20


அச்சு: கொல்லம்


தம்பிரான் வணக்கம் 1578 அக்டோபர் 20-ம் நாள், கொல்லத்தில் அச்சாயிற்று. கொல்லம் (Quilon) கேரளக் கடற்கரை வணிகப் பட்டினம்.

தம்பிரான் (தன்+பிரான்) வணக்கம் தன் கடவுளை வணங்குதல் எனும் பொருள் தரும்.

● கர்ட் ரெய்சிங்கர் (Curt H. Resinger) என்பவர் 1951-ம் ஆண்டு ஹார்வார்டு (Harward) பல்கலைக் கழக நூலகத்திற்கு சிறுநூல் ஒன்று அன்பளித்தார். நூல் சிறிதுதான். ஆயின் பெரும் புகழ் கொண்ட தமிழ் மொழியின் முதல் அச்சு நூல் அது. பெயர் தம்பிரான் வணககம்.

ரெய்சிங்கர் அளித்த நூலின் முதல் ஏட்டில் Doctrina Christionea என்று கையெழுத்தில எழுதப்பட்டிருக்கிறது. கடைசி ஏட்டில்,





— இவ்வாறு காண்கிறது. இரண்டு கையெழுத்துகளும் வேறு வேறு.

— இந்தக் குறிப்பு தம்பிரான் வணக்கத்தின் பயணத்தைக் காட்டுகிறது.

சியனா (Siena) புகழ்மிகு கிறித்துவத் தலம். 1773-ல் அங்கே மதங்களின் மேல் கட்டுப்பாடு விதிகள் கடுமையாக்கப்பட்டன. தொடர்ந்த குழப்பத்தில் அங்கிருந்த இயேசு சபை ஒன்றிலிருந்து, தம்பிரான் வணக்கம் வெளியேறி இருக்கும்.

பின்னர் அது வியன்னா பெய்டல்கோமிஸ் இளவரசிகள் நூலகத்திற்குப் போய்ச் சேர்ந்தது. அந்நூலகத்தில் இலட்சினைத் தகடு ஒன்று ஹார்வர்டு நூற்பிரதியின் அட்டையில் ஒட்டப்பட்டுள்ளது. நூலின் உள்ள தோல் கட்டு (Binding) வியன்னா நூலகத்திற்கே உரியது.

வியன்னாவில் இருந்து ஐரோப்பிய புத்தகச் சந்தைக்கு வந்து சேர்ந்த தம்பிரான் வணக்கம், அங்கிருந்து அமெரிக்காவுக்குப் போயிற்று. பல கைகள் மாறி இறுதியாய் ரெய்சிங்கரிடம் வந்து சேர்ந்தது. அவர் அந்நூலை புகழ்மிகு ஹார்வர்டு கல்லூரிக்கு (தோற்றம் 1636) ஒப்பளித்தார்.

உலகின் பெரும் நூலகங்களில் ஒன்று ஹார்வேர்டு பல்கலைக் கழக நூலகம். அமெரிக்க நாட்டின் முதுபழம் நூலகமும் இதுவே (1638). அங்கே உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை ஒரு மில்லியன்.

அவை அரிய நூல்கள் - சுவடிகள், சமயம், சட்டம், மருத்துவம், விலங்கியல், நுன்கலை, நிர்வாகம் எனப் பல்வேறு தலைப்புகளில் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் ஒரு தனி (கிளை) நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அரசு நிர்வாகம் பற்றிய நூல்கள் உள்ள நூலகத்திற்கு ஜான் எப். கென்னடி பெயரிடப் பட்டிருக்கிறது. அரிய நூல்கள் சுவடிகள் காக்கப்படுவது ஹௌடன் (Houghton) நூலகத்தில், ஹௌடனில் மட்டிலும் 3 லட்சம் நூல்கள் உள்ளன. அவற்றில் கி.பி. 1500-க்கு முன் அச்சானவை 3700 (The World of Learning 1979 - 80). அரிய நூல் தொகை இன்று 4000 ஆகி இருக்கலாம். ஹௌடனில் உள்ள தம்பிரான் வணக்கத்து நூல் எண்

உலகின் பல்வேறு நூலகங்களிலும், இதுவரை அறியப்பட்ட தமிழ் அச்சு நூல்களில் தம்பிரான் வணக்கமே முதல் அச்சு நூல்.

● அபிசினியா (எதியோப்பியா) மன்னர் வேண்டுதலுக்கிணங்க, அந்நாட்டுக்கு அச்சியந்திரங்களும் அச்சுக் கலைஞர்களும் அனுப்பி வைத்தார் போர்த்துகல் மன்னர். கப்பல் கி.பி. 1556 மார்ச் 29-ம் நாள் புறப்பட்டது. அது போய்ச் சேரும் முன்பு அபிசினியா மன்னரின் மனம் மாறிப்போனது. அவர் போர்ச்சுக்கல் பாதிரிமார்களின் வருகையை விரும்பவில்லை. ஆதலால் அக்கப்பல் இந்தியாவில் தங்கும்படி ஆயிற்று. அப்படியாக அக்கப்பலில் இருந்த அச்சியந்திரங்கள் 6.9.1556-ம் நாள் கோவா மண்ணில் கால் வைத்தன.

கோவா இயேசு சபைக் கல்லூரிப் பாதிரிமார்கள் தங்களுக்கு ஒரு அச்சியந்திரம் வேண்டும் என்று, போர்ச்சுக்கல் தலைமையை பலகாலும் வேண்டினார்கள்.

— இந்தக் கல்லூரியில் (புனித நம்பிக்கைக் கல்லூரி கோவா)

கிறித்துவராய் மாறிய அறுபது மாணவர்கள் பயில்கிறார்கள். அவர்கள் பல்வேறு தேசிய இனத்தவர். ஒன்பது மொழிகளைப் பேசுகின்றனர். ஒவ்வொன்றும் வேறு வேறு. அவர்கள் நம் மொழியும் தம் மொழியும் படிக்க எழுத அறிவார்கள். புத்தகம் இன்மையால், அவர் தாம் பெறுதற்குரிய நன்மைகளை அவர்கள் பெற இயலவில்லை. இம்மொழிகளில் கிறித்துவக் கொள்கைகளை வெளியிடலாம் என்றெழுதினார் பாதிரியார் ஜோன்ஸ் டி. பெய்ரா (Beira).

இது விசயத்தில் முன்னுரிமை வழங்கப்படாமல் இருந்த கோவா இயேசு சபைக்கு எதிர்பாராத விதமாக அச்சியந்திரங்கள் கிடைத்தன.

கோவா இயேசு சபை போர்த்துகீசிய மொழியில் நூல்கள் அச்சிட்டது. அவை பாதிரிமார்களுக்கானவை. கோவா நூல்கள் வேறு நாடுகளுக்கும் சபைகளுக்கும் அனுப்பப் பெற்றன.

போர்ச்சுகல் இந்திய இயேசு சபை செயல்பாடுகள் விரிவடைந்தன. இந்திய மேற்குக் கரை ஏழை எளிய மக்கள் அவர்களது இலக்கு. கொல்லம், கொச்சி, புன்னைக்காயல் என்று கரையோரங்களில் இயேசு சபைகளும், திருக்கோயில்களும் பூத்தன.

கிறித்துவின் போதனைகளை உபதேசித்து வந்த பாதிரிமார், இந்திய மக்கள் கிறித்துவின் போதனைகளைத் தாமே படித்தறிய வேண்டும் எனவும், அதற்கென நாட்டவர் மொழியில் நூல்கள் ஆக்கப்படவும் வேண்டுமெனவும் விழைந்தனர். அதன் விளைவாய் இந்தியாவில் அச்சகங்கள் தோன்றின.

1556-ன் கோவா அச்சு 1557 கொல்லம், அம்பழக்காடு; 1578, புன்னைக்காயல்; 1478 வைப்புக்கோட்டை இப்படியாக விரிந்து பெருகிற்று. இந்த அச்சகங்களில் வேறு மொழிகளிலும் அச்சாயின.

ஆனால், அந்நூற்றாண்டு முடிய இந்திய மொழி எதிலும் அச்சு தொடங்கப் பெறவில்லை. கொங்கனி போலும் கடற்கரை மக்களின் மொழியின் நூலாக்கப்பட்டன. எனினும் அவை ரோமன் எழுத்துக்களால் ஆனவை.

இந்திய மொழிகளில் முதல் முதல் எழுத்தாக்கப்பட்டது கோவா வில். கோவாவில் அச்சான தமிழ் நூல்தான் தமிழ் மொழியின் முதல் அச்சு நூலாக இருக்க வேண்டும். ஆனால், அதைக் கண்டறியும் வரை, கண்ணிற்காணும் வரை, கொல்லத்திற்கே முதலிடம் வழங்கப் பட வேண்டும்.

திருத்தமான இந்திய அச்செழுத்து உருவாக்கப்பட்டது கொல் லத்தில். இந்திய மொழிகளில் இப்போது அறியப்படும் முதல் நூல் அச்சானது கொல்லத்தில். அந்நூல் -

தம்பிரான் வணக்கம்!

● தம்பிரான் வணக்கம் ஒரு மொழி பெயர்ப்பு நூல். மூலநூல் Doctrina Christum - ஆசிரியர் புனித சேவியர் (St. Francis Xavier) 'தன்னையே தமிழுக்குத் தந்தவர்' சேவியர்.

புனித பிரான்சிஸ் சேவியர் (1506 - 1552) ஸ்பெயின் வம்சாவ ழியினரான போர்த்துக்கீசிய, கிறித்தவப் பாதிரியார். அவர் 1541-ல் இந்தியாவிற்கு வந்து திருவாங்கூர், கடலோரத் தாழ்த்தப்பட்ட மக்க ளிடத்து கிறித்துவ ஊழியம் ஆற்றினர். நாட்டவர் மொழியை அறிந்து கொள்வதில் அதிக நாட்டம் கொண்டார்.

தம்பிரான் வணக்கத்தைத் தமிழாக்கம் செய்தவர் அண்டிறிக்கி பாதிரி. மொழியாக்கம் செய்யப்பட்ட நாள்: 20.2.1557. அச்சாகிய நாள்: 20.10.1578.

கோவாவில் அச்சான முதல் நூல் சேவியரின் நூலே. இதன் அச்சுப்பிரதி, இதவரை யார் கண்ணுக்கும் தென்படவில்லை. எனி னும் கிறித்துவ மற்றும் அச்சியல் ஆய்வாளர்கள் தம் தேடுதலைத் தொடர்ந்த வண்ணம் உள்ளனர். எனினும், புனித சேவியரின் கையெ ழுத்துப் படியைப் பார்த்துப் படியெடுக்கப்பட்ட கையெழுத்துப் பிரதி கள், லிஸ்பனினும், ரோமிலும் உள்ளன. அவை கவனத்தோடு பாது காக்கப்படுகின்றன.

தலைமைப் பாதிரி சேவியர், தனக்கு அனுப்பப்படும் துணை ஊழியர்களும் தன்போலிருக்க வேண்டுமென எதிர்பார்த்தார்.

அதிக புத்திசாலியாயும், மிகு கவனமுள்ளவராயும், தியாகம் செய்பவராயும் உள்ள ஊழியர்களை அனுப்பித் தாருங்கள் என்று போர்த்துகல் தலைமையை வேண்டினார் அவர்.

புனித சேவியரின் வினா விடை (Catechism) கையெழுத்துப்படி தான், அவருக்கும் அவர் சார்ந்த திருச்சபைக்கும் முதன்மையான நூல். பல்வேறு மொழிப் பாதிரிமார்களும் அதனைப் பலமுறைப்படி எடுத்துக் கொண்டார்கள்.


புனித சேவியரின் நூலும் ஒரு வழி நூல் எனத்தக்கதே. 1539-ல் ஜோவோடே பாரோஸ் (Barros) தொகுத்ததுவே சேவியருக்கு முன் மாதிரி. இதற்கு முன், இதற்கு முன் என்று இப்படியே நாம் முன் ஓடினோமானால், நாம் கிறித்துவிடமே போய் நிற்க நேரும்.

புனித சேவியரின் நூல் 1557-ல் கோவாவில் அச்சாயிற்று. அச்சிட்டவர் போர்ச்சுகலில் இருந்து 1556-ல் கோவாவுக்கு வந்து சேரும்படி நேர்ந்த புஸ்த மாண்டி.

ஆம், தம்பிரான் வணக்கத்துப் பத்து கட்டளைகள், திருச்சடங்குகள், கொடும்பாவங்கள் பட்டியல் இவை. கிறித்துப் பேசியவையே பைபிளில் பதிவு பெற்றவையே.

தம்பிரான் வணக்கம் தமிழாக்கத்திற்கு, அன்றிக்கு பாதிரியாருக்கு உதவியவர் மானுவல் பெட்ரோ (Manoel de Sao Pedro) பாதிரியார். இவர் இந்தியக் கிறித்துவர்.

DOCTRINA CHRISTAM en Lingua Malauar Tamul.



கொமபஞுஞியதெசெசு
வகையாலணடிரிககிப
பாதிரியாாதமிழலெ
பிரி ததெழுதின தமபி
ரான வணககம -

-'உ- ✠

✠ தமுழவாததை அலலாதசொலலென வ
அரியதததககதாக மூள ஞுமபிள ஞுமபெப
டி—கசோ ததொணட—யா ளாயகுரிசசி
ருககு து - ? ? . ?கததோலிககா?வெள வம -
?செகசொச?வெள வம - ✠ சூருளளயஅ . ம .
வருஷிம அபபிளைசமா தம . உய . ௭ . தொலல
✠—— - ததுண——ாகதினளழுதது - ——✠

DOctrina Cristaã tresllada da em lin-
gua Tamul pello padre Anrique
Anriquez da Cõpanhia de IESV, & pel-
lo padre Manoel de Saõ Pedro. Com ap-
prouaçaõ do Ordinario, & Inquisidor:
& cõ licẽça do Superior da mesma
Companhia: Impressa em
Coulam no Collegio
do Saluador: aos
Vĩte de Octubro de .M.D.LXXVIII.

Vaõ nesta doctrina alguũs vocabulos osquais pera se conhecerẽ naõ saõ Malauares se lhe pos este sinal ? ? vt ?Igreija?.

✠ ✠ ✠

ரிசுததமானகுருசின அடையாளததா
லெஙகளசததுருககளெஙகளமெலவாரா
மலககாததுககொளளுஙகள நமபிரானெ
✠ பிதாமகன சுததமான ஸபிரிதது
நாமததிலெ ஆமென -

Credo

ஙவானமுமபூமியுமபடைததசருவதது
ககுமவலலபிதாவான தமபிரானெயவிசுவ
திககிறெனவனுடையமகனொருவனநம
முடையநாயனசெசுககிறிசதவையெவிசு
சுவதிககிறென அவனசுததமானஸபிரித
துவினாலெகனிததுககனனிமரியாளவயறறி
லநினறுபிறநதானபொனசியுபபிலாததி
னகீழபாடுபடடுககுருசிலெயறையுணடு
செததடககபபடடானபாதாளஙகளிலிற
ஙகிமுனறாநாள செததவாகளிலெயிருந
ன எழுநததானவானஙகளிலெறிசசருவத
துககுமவலலபிதாவாகியதமபிரானவலப
பாகததிலிருககிறானஅஙகததிலநினறிருககி
றவாகளுககுஞசெததவாகளுககுநதீர
கவருவான சுததமானஸபிரிதது
வையெவிசுவதிககிறென கததொலிககா
வாகியசுததமான இகிறெசையுஞசுததமா
னவாகளகூடடமுமுணடென்று விசுவதிக

கிறேனபிழைகளபோவததவருசெததவா
திருபாததவமெனறெனறைககுமுளளவ
ஙகிததுமுனடென உவிசுவததிககிறென
ஆமென -

Os Mandamentos

✠ தமபிரானமாறகததின
கறபினைகளாவதுபததது -

❡ முதலாவதெலலாததிலுமபாறகததமபிரா
னைநெசிததிருபபது -

❡ ரணடாவதுதமபிரானதிருநாமததை
ததகொணடுவிணசததியஞசெயயாமலி
ருபபது -

❡ மூனறாவதுநாயறடைசசுருமபெருநா
டகளுஞசுததமாயககொணடாடி
ருபபது -

❡ நாலாவதுபிதாவையுமாதாவையுஞசங
கிததிருபபது -

❡ அஞசாவதுகொலைசெயயாமலிருபபது -

❡ ஆறாவதுமஉவகறெஙகாமலிருபபது -

❡ எழாவதுகளவாறுமலிருபபது -

❡ எடடாவதுபொயசசாடசிசொலலா
மலிருபபது -

❡ ஒனபதாவதுஒருததனபெணசாதிககிச
சைபபடாமலிருபபது -

ஏ பததாவது அநதனம வசுததுககளுககு
அவெடைகைபபடாதிலிருபபது -
ஏ ஒநதபபததுககிரபினைகளுமாணடவ
டைநுககுமமுதலாவதெலலாததிலுமபாரக
ததமபிரானைநெசிததிருபபது -
ஏ ரெணடாவது தனனைததானசினெகி
ததிருககுமாபபொலயவவணணமறறெல
லாரையுஞசினெகிததிருபபது -

OsMãdamentos da Igreija

✠ சுததமான மாதாவாகிய
யாகிரெசையினகறபி
னைநதாவது அஞசு -

ஏ முதலாவது நாயருடைகளிலெயுமபெ
ருநாடகளிலெயுமமுழுமீசைகெடகிறது.
ஏ ரெணடாவதொருமுறையெணகிலும
வருஷததொ ... கொமபெசாரிககிறது -
ஏ மூனறாவது பாசககுயியாலெசாநதுச
ககிறமெநதுகொளளுகிறது -
ஏ நாலாவது சுததமான மாதாவாகிய யாகி
ரெசைகறபிதத நாளநொனபுநொறகி
றது - ஏ அஞசாவது தீசிமுகளுமபிறதற
பலனகளுஙகொடுககிறது -

Padre nosso

ஏ வானஙகளிலிருககிறவெஙகளபிதாவெ

வுனனுடையநாமமெலலாருஞ சுததமாக
வுனனுடையவிராசசியமவாவுனமனநிற
படிவானததிலவானாவாகளசெயயுமாப
பொலெபூமியிலமனுஷரெலலாருஞசெயயபண
ணு உளளாளெங்களபபமெங்களுககினறு
தாருமெயஙகளாபிழைககடனகாருககுநாங
களபொறுககுமாபபொலெநீயுமெங்கள
பாவககடனகளைபபொறுவெங்களைததோ
ஷததுககெதுவாகவொட——ாதெயெங
ளுககுபபொலலாஙகுவாரா
மலவிலககு - ஆமென -

Aue Maria

ஏ கிருபைநிறைநதமரியாளெநமபிரானு
ன னொடெ——இருககாததாவனனி——ததி
லெபெணசாதிகளிலசுததமானவளநீயெ
வுன னுடை——பபயற்றிலகததியாகியயெ
ருவஞசுததமான துசுததமானமரியாளத
மபிராயுடை——யமாதாவெபிழையாளிக
ளாயிருககிறவெஙகளுககுவெணடியப
பொதுமெஙகள அததாலததிவமொநது
கொள - ஆமென -

Salue Regina

ஏ ராசதனனியாககததுககுமாதாவெ
தமபிராவனனியல——சககவாயததிவு

ணடையம நூமமெவருததளபிரமாணமெதமபி
ராததுலானெலல — சீசகநாயகனால தூபாக
பபடடுததிரிகிறயெனவடிடையமகூறுனன
னெயெகூபபிடுகிறெமிநதசசகணணீரததலத
நிவழுதநதுமழுதுமுனகசெபெருமூசசுவிடு
கிறெமாதையாருடலெஙகளுககுவெணடி
மனமுருகிறவளெவுனனுடயவிரககமான
கணகளகொணடெஙகளெததிருமபிபபா
பபடியெவிநதபபூமியலலதுபாககஙகழி
நதபினனுனனுடைய — யவயிறறிலசுததமான
கனியாகியசெசுவையெஙகளுககுககாட
டுவயயொவிரககமுளளவளெயயொவரு
ளுளளவளெவயயொமதூமுளளகனனி
மரியாளெசெசுககிறீசததுநாருவொமெ
ன அசொனன நனமைகளநாஙகளபெற
நதககததாககததமபிரானுடைய — யசுததமான
தாயெயெஙகளுககுவெணடி
யாநதுகொள - ஆமென -

A Confissão

ஞ நானபெருமபிழையாளிசஉவததுக
குமவலலதமபிரானொடெ — யுஞசுததமான
மரியாளொடெயுஞசுததமான ſமிகெலஉக
காஞசுſவொடெயுஞசுததமான ſசுவாமவவு
ததீசுததைſவொடெ — யுஞசுததமானபெ

நு அவோடே—யுஞசுததமானபாவுழவோ
டே—யுமெலலாசசா ரகவாதிகளோடே—
யுமபாதிரியாரோவுமமோடே—யுநதோம
பெசாரிததிறேனதெனனெனனமுலநினைவி
ருலெயுமவசன ததிருலெயுமந—படியா
ருலெயுமனகமநான மைகளசெயயாதிரு
நததிருலெயும ததபபிழைசெயதேனெ
னபிழையனபிழையனபெருமபிழை
யாதையாருலெசுததமானமரியாளோடே
யுஞசுததமான ?மிகெல அககாருசு?வோடே
யுஞசுததமான ?சுவாமவவுததீசுததை?வோ
டே—யுஞசுததமானபெ துஅவோடே—யு
ஞசுததமானபாவுழவோடே—யுமெலலாச
சொ ரகவாதிகளோடே—யுமெனககுவெண
டி—ததமபிராநெருடே—விநதுகொளள
விாககிறேன பாதிரியாரோவுமமோடே—யு
மெநதெர்விசாஙகளினகட—வி[illegible]ததககூ
தாகவிாககிறேன -

Os Artigos da Fee

✠ கிரிசததியானிகளவிசுவாதிககததககூா
ணிககஙகளாவ து—பதிருவவிதிரதெயவகத
துககுததததெழுமாயுவீசகதது ககுநறதெ
ழுதெயவககதது ககுததவெழில -

¶ முதலாவதுசவதுககுமவலலதமபிரா

ஒருவனாயை விசுவசிக்கிறது -

௨ இரண்டாவது பிதாவென்னை விசுவசிக்கிறது -

௩ மூன்றாவது மகனென்னை விசுவசிக்கிறது -

௪ நாலாவது சுத்தமான இஸ்பிரீத்தென்னை விசுவசிக்கிறது -

௫ அஞ்சாவது படைக்கிறவனென்னை விசுவசிக்கிறது -

௬ ஆறாவது இரட்சிக்கிறவனென்னை விசுவசிக்கிறது -

௭ ஏழாவது மோட்சங் கொடுக்கிறவனென்னை விசுவசிக்கிறது -

✲ மானுஷீகத்துக்கடுத்தவையில் -

௧ முதலாவது தம்பிரானுடைய மகனான சுத்தமான இஸ்பிரீத்து விருச்சன்த்தானென்னை விசுவசிக்கிறது -

௨ இரண்டாவது சுத்தமான கன்னிமரியாளிடத்திலே பிறந்தானென்னை விசுவசிக்கிறது அவளுடைய முன்னேயுங் கன்னியுடைய பிறக்கும்போழ்துங் கன்னியுடைய பிறந்த பிறகுங் கன்னியே -

௩ மூன்றாவது எங்களுக்குவேண்டிக் குருசிலேயறையுண்டு செத்து அடக்கப்பட்டானென்னை விசுவசிக்கிறது -

¶ நாலாவது பாதாளங்களிலிறங்கியங்கே தானவாற பாதநிருநதசுததபாளாரபு யங்களையெ —— றறுடையான உவிசசுவதிக கிறது -

¶ அஞசாவது மூனறு —— செததவாகளி ளை —— யலநின உயாததானென உவிசசு வதிககிறது ·

¶ ஆறாவது வானங்களிலெறிசசவவ தநுக குமயலலபிதாவாகிய தமபிராயாவலபபாக ததிலிருககிறனென உவிசசுவதிககிறது -

¶ எழாவது நடுததீறககிறகாலததிலெயாறுககி றவாகளுககுஞசெததவாகளுககுமவாவாசெ யதநனமைதினமைககுததகக நடுததீறக வருவானென உவிசசுவதிககிறது -

Os Sacramẽtos da Igreja

✠ சுததமான யிகிறெசையான

சககிறமெநதுகளாவதெழு -

¶ முதலாவது பவுததீசமு -

¶ ரெணடாவது கிறிசமாறிததல -

¶ மூனறாவது சாநதுசககிறமெநது -

¶ நாலாவது கொமபெசாறிததல -

¶ அஞசாவது எசததிறெமவுஞசாம -

¶ ஆறாவது ஒடுதெண -

¶ எழாவது மததிறிமொனியு -

Os Peccados Capitais

✠ தலையான பாவங்களாவதேழு -

¶ முதலாவது அகந்தை -

¶ இரண்டாவது அவரேசை -

¶ மூன்றாவது மோகம -

¶ நாலாவது கோபம -

¶ அஞ்சாவது கோதி -

¶ ஆறாவது காய்மகாரம -

¶ ஏழாவது சோம்பல -

✠ தலையான பாவங்களுக்கெதி-
ரான நன்மைகளாவது -

¶ அகந்தைக்கெதிர் எளிமை -

¶ அவரேசைக்கெதிர் ஈகை -

¶ மோகத்துக்கெதிர் கசத்திதாதி -

¶ கோபத்துக்கெதிர் பொறுதி -

¶ கோதிக்கெதிர் தெம்பொரனசை -

¶ காய்மகாரத்துக்கெதிர் அன்பு -

¶ சோம்பலுக்கெதிர் முயற்சி -

As Obras de Misericordia

✠ இரக்கத்தின் நற்படிகளாவ
து பதினாலு அதில் உடலுக்கான
தேழு ஆத்துமத்துக்கானதேழு -
✠ உடலுக்கானவெழில் -

¶ முதலாவது கிலேசக்காரனைச் சென்று
பார்க்கிறது -

ஏ ரெண்டாவது பசித்தவர்களுக்குப் பசியாற்றுவிக்கிறது -

ஏ மூன்றாவது தவிச்சவர்களுக்குத் தாபந்தீர்க்கிறது -

ஏ நாலாவது சிறைப்பட்டிருக்கிறவர்களை மீளுகிறது -

ஏ அஞ்சாவது கூரையில்லாதவர்க்குக் கூரைகொடுக்கிறது -

ஏ ஆறாவது பரதேசிகளுக்கு விடுதிகொடுக்கிறது -

ஏ ஏழாவது செத்தவர்களையடக்கிறது -

※ ஆத்துமத்துக்கான வெழில் -

ஏ முதலாவது அறியாதவர்களைப் படிப்பிக்கிறது -

ஏ ரெண்டாவது புத்திவேண்டினபேர்களுக்கு நல்லபுத்தி சொல்லிக்கொடுக்கிறது -

ஏ மூன்றாவது திருத்தப்படுத்தவேண்டும்பேர்களைத் திருத்தப்படுத்துகிறது -

ஏ நாலாவது அவனவன் செய்த தும்மைப்பாடுகளைப் பொறுக்கிறது -

ஏ அஞ்சாவது அவனவன் செய்த குற்றங்குறைகள் மனதில் காணாமலிருக்கிறது -

ஏ ஆறாவது சலிப்புள்ளபேர்களுக்குச் சலிப்புத்தீர வாறுதல் சொல்லுகிறது -

¶ ஏழாவது ஒருக்கிறவாகளுக்குச்செத்தவ
ாகளுக்குமவெண்டிதமபிராநெவெ—
விாநதுகொளளுகிறது -

Os Cinco Sentidos

* உடம்புக்குளளா பூதியங்களாவதஞ்சு -
¶ முதலாவது பாா்வை -
¶ ரெண்டாவது கேளவி -
¶ மூணாவது வாசினை - ¶ நாலாவது ருசுவை -
¶ அஞ்சாவது தடவுதல் -

As Virtudes Theologais

* திதெய்வொளாதாயசாணவிடுத
தூணைகளாவது மூணு -
¶ விசுவாதம - ¶ நமபிககை - ¶ அனபு -

As Virtudes Cardeais

தஙயாணவிடுததூணைக
ளாவது நாலு -
¶ புததி - ¶ நியாயம - ¶ மனமிடுக்கு -
¶ திதெமபொருளைசி -

Os Imigos da Alma

* ஆதமாவுககுசசதுரு
ககளாவது மூணு -
¶ பூலொகம - ¶ உடல - ¶ பெய -

As Cousas Derradeiras

* வெதியானவையாவது நாலு -

¶ மரணம - ¶ நடு - ¶ நரகம - ¶ சொரககம -

As oyto Beauenturancas

⁂ நமமுடையநாயனீசெசுககிறிசதுதொ
ரு முறைரயறிவதிருவுளளமபறறியாபபாசூ
நுமொககிசிபபொகளிலெடடு
வகையறிவிததாரதில -

¶ முதலாவது மனததிலெளிமையாயிருககி
றவாகளமொககிசிபபொகளாயிருககிறாக
ளதெனனாலவாகளவானனுகளிலிராசசி
யததுககுடையவாகள -

¶ ரெணடாவதுசாநதுநடககிறவாகள
மொககிசிபபொகளாயிருககிறாகளதெ
னனாலவாகளபூமியையாணடிருப
பாாகள -

¶ மூனறாவதழுகிறவாகளமொககிசிபபொக
ளாயிருககிறாகளதெனனாலவாகளச
நதொசிபபடடிருபபாாகள -

¶ நாலாவதுநியாயநடககவெணுமெனறு
பசிதவாமுணடாயிருககிறவாகளமொக
கிசிபபொகளாயிருககிறாகளதெனன
லவாகளபசிதவாநதிரநதுசமபூாணமா
யிருபபாாகள -

¶ அஞசாவதிரககமுளளவாகளமொககிசி
பபொகளாயிருககிறாகளதெனனால

பாதுகாக்கப்படுவார்கள்.

௬ ஆறாவது மனஞ்சுத்தமாயிருக்கிறவர்கள் மோக்ஷிப்போர்களாயிருக்கிறார்கள் ஏனென்றால் அவர்கள் தம்பிரானைத் தரிசிப்பார்கள்.

௭ ஏழாவது உறவுக்குத் தத்தெண்டிக்கிறவர்கள் மோக்ஷிப்போர்களாயிருக்கிறார்கள் ஏனென்றால் அவர்கள் தம்பிரானுடைய மக்களென்னப்படுவார்கள்.

௮ எட்டாவது நியாயத்துக்குவேண்டிப் பாடுபடுகிறவர்கள் மோக்ஷிப்போர்களாயிருக்கிறார்கள் ஏனென்றால் அவர்கள் வானங்களிலிராச்சியத்துக்குடையவர்கள்.

✠ இத்தவிர மக்காசவேண்டி மனுஷருங்களைத் திட்டும்பொழுதும் நெருக்கஞ்செய்யும்பொழுதும் பொல்லாங்கெல்லாமுங்களைக்கொண்டு பொய்யாகச் சொல்லும்பொழுதும் மோக்ஷிப்போர்களாயிருக்கிறீர்கள் உள்ளங்களிகூர்ந்து சந்தோஷமாயிருங்கோள் ஏனென்றால் வானங்களில் உங்களுடைய பகுதியுமுண்டாயிருக்கிறது இவையெல்லாம் நம்முடைய நாயனிசேசுக்கிறீசித்துத் திருவுளம்பற்றினது.

✠—ஆ—மெ—ன - இ—யெ—சு—க்ரு—சு—✠

✠

- ய௬ா -

கோவையால் அச்சடித்த எழுத்து.

Esta letra, se fez, ẽ Goa: no ãno de lxxvii.

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ க கா கி கீ கு கூ ங ஙா ஙி ஙீ ஙு ஙூ
ச சா சி சீ சு சூ ஞ ஞா ஞி ஞீ ஞு ஞூ
ட டா டி டீ டு டூ ண ணா ணி ணீ ணு ணூ த தா தி தீ து தூ
ந நா நி நீ நு நூ ப பா பி பீ பு பூ ம மா மி மீ மு மூ
ய யா யி யீ யு யூ ர ரா ரி ரீ ரு ரூ ல லா லி லீ லு லூ
வ வா வி வீ வு வூ ழ ழா ழி ழீ ழு ழூ ள ளா ளி ளீ ளு ளூ
ற றா றி றீ று றூ ன னா னி னீ னு னூ

Letra Tamul: feita ẽ Coulã: ãno de lxxviii.

கொல்லத்தில் அச்சடித்த எழுத்து.

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ.

க கா கி கீ கு கூ. ங ஙா ஙி ஙீ ஙு ஙூ.

ச சா சி சீ சு சூ - —— - ஞ ஞா ஞி ஞீ ஞு ஞூ -

ட டா டி டீ டு டூ ண ணா ணி ணீ ணு ணூ

த தா தி தீ து தூ

ந நா நி நீ நு நூ - —— ப பா பி பீ பு பூ -

ம மா மி மீ மு மூ. —— ய யா யி யீ யு யூ.

ர ரா ரி ரீ ரு ரூ - ல லா லி லீ லு லூ -

வ வா வி வீ வு வூ - ——— ழ ழா ழி ழீ ழு ழூ -

ள ளா ளி ளீ ளு ளூ. ற றா றி றீ று றூ -


— ன னா னி னீ னு னூ —

௧.௨.௩.௪.௫.௬.௭.௮.௯.௰

Soli DEO honor, & gloria. Amen.

DOCTRINA CHRISTAM

en·Lingua Malauar Tamil



கொம்பஞ்ஞயதெ சேசூ
வகையிலே அண்டிறிக்கிப்
பாதிரியார் தமிழிலே -
பிரித்தெழுதின -
தம்பிரான் வணக்கம்.

தமிழ் வார்த்தை அல்லாத சொல்லென்று அறியத்தக்கதாக முன்னும் பின்னும் இப்படிக் கொத்த இரண்டடையாளம் குறிச்சிருக்குது.

கத்தோலிக்க வென்றும்
இகெரெச வென்றும்

கூருளஎய அம் வருஷம்,
அப்பிரைசை மாதம் 20-ம் தேதி
கொல்லத்துண்டாக்கின எழுத்து

இயேசு சபையைச் சார்ந்த
அண்டிறிக்கு அண்டிறிக்கி பாதிரியார்
மற்றும் மானுவல் தெ சா பெட்ரோ பாதிரியார்
தமிழில் மொழிபெயர்த்த
டாக்டரினா கிறிஸ்டினா

தணிக்கையாளர் அனுமதி பெற்றது
சபைத் தலைவரின் இசைவு பெற்றது
கொல்லம் சேவியர் கல்லூரியில்
அச்சிடப் பெற்றது.

20 அக்டோபர் 1578

குருசு
(சிலுவை அடையாளம்)

சுத்தமான குருசின் (Cross - சிலுவை) அடையா ளத்தால் எங்கள் சத்துருக்கள் எங்கள் மேல் வராமல் காத்துக் கொள். எங்கள் தம்பிரானே பிதாமகன் சுத்த மான இசுபீரித்து *(Spirit - ஆவி)* நாமத்தினாலே ஆமென்.

விசுவாசக் கோட்பாடு

வானமும் பூமியும் படைத்த சறுவத்துக்கும் வல்ல பிதாவான தம்பிரானையே விசுசு வதிக்கி றேன். *(விசுவாசிக்கிறேன்)* அவனுடைய மகனொரு வன் நம்முடைய நாயன் சேசூக்கிரிசித்தையே விசுவ திக்கிறேன். இவன் சுத்தமான இசுப்பீரீத்துவினால் சனித்துக் கன்னி மரியாள் வயிற்றில் நின்று பிறந் தான். பொஞ்சியுப் பிலாத்தின் கீழ்பாடுபட்டுக் குரு சிலே அறையுண்டு, செத்தடக்கப்பட்டான். பாதா ளங்களில் இறங்கி மூன்றாம் நாள் செத்தவர்களிடை யில் நின்று உயிர்த்தான். வானங்களில் ஏறி சறுவத் துக்கும் வல்ல பிதாவாகிய தம்பிரான் வலப்பாகத் தில் இருக்கிறான். வடத்தில் நின்றிருக்கிறவர்களுக் கும் செத்தவர்களுக்கும் நடுத்தீர்க்க வருவான். சுத்த மான இசுபிரித்துவையே விசுவதிக்கிறேன். கத்தோ லிக்கவாகிய சுத்தமான 'யிகிரொசையும்' *(Ecglesia -*

திருச்சபை) சுத்தமானவர்கள் கூட்டமும் உண்டென்று விசுவாதிக்கிறேன். பிழைகள் பொருத்தருளும் / செத்தவர்களும் உயிர்த்தவர்களும் என்றென்றைக்கும் உள்ளவராய்யித்து உண்டென்று விச்சுவதிக்கிறேன்.

ஆமென்.

பத்து
கட்டளைகள்

தம்பிரான் மார்க்கத்தின் கற்பினைகளாவது பத்து

முதலாவது எல்லாத்திலும் பார்க்கத் தம்பிரானை நேசித்திருப்பது.
இரண்டாவது தம்பிரான் திருநாமத்தைக் கொண்டு வீணே சத்தியம் செய்யாமலிருப்பது.
மூன்றாவது ஞாயிறட்சைகளும் பெரு ,ாட்களும் சுத்தமாய்க் கொண்டாடி இருப்பது.
நாலாவது பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பது.
அஞ்சாவது கொலை செய்யாமலிருப்பது.
ஆறாவது மறுமுகம் நோக்காமலிருப்பது.
ஏழாவது களவாணாமலிருப்பது.
எட்டாவது பொய்சாட்சி சொல்லாமலிருப்பது.

ஒன்பதாவது ஒருத்தன் பெண்சாதிக்கு இச்சைப் படாமலிருப்பது.

பத்தாவது ஆதனம் வசுத்துகளுக்கு *(ஆதனம் - பார்வை, ஆதனம் வஸ்து - கண்ணிற் கண்ட பொருள்)* அவேட்கைப் படாமலிருப்பது.

இந்தப் பத்துக் கற்பனைகளும் இரண்டில் அடங்கும். முதலாவது எல்லாத்திலும் பார்க்கத் தம்பிரானை நேசித்திருப்பது இரண்டாவது தன்னைத்தான் சிநேகித்திருக்குமாப் போலே அவ்வண்ணம் மற்றெல்லாரையும் சிநேகித்திருப்பது.

யாத்திராகமம் 2017

திருச்சபைக் கட்டளைகள்

சுத்தமான மாதாவாகிய இகிரேசையின் கற்பனைகளாவது *(கட்டளை)* அஞ்சு.

முதலாவது நாயரட்சைகளிலேயும் *(ஞாயிறு)* பெருநாட்களிலேயும் *(விழாநாள்)* முழு மீசை *(மிசா - திருப்பலி பூசை)* கேட்கிறது.

இரண்டாவது ஒருமுறை என்கிலும் வருஷம் தொறும் கோம்பேசாரிக்கிறது *(Confession).*

மூன்றாவது பாசுக்குவை *(Bascha)*யிலே சாந்து சக்கிரமெந்து *(Sacrement) (நற்கருணை திருவிருந்து)* கொள்ளுகிறது.

நாலாவது சுத்தமான மாதாவாகிய இகிரேசை கற்பித்த நாள் நோன்பு நோற்கிறது.
அஞ்சாவது தீசிமுகளும் *(தேசிமோஸ் - வருவாயில் பத்தில் ஒரு பங்கு)* முதற்பலன்களும் கொடுக்கிறது.

எங்கள் தந்தையே!

வானங்களிலே இருக்கிற எங்கள் பிதாவே! உன்னுடைய நாமம் எல்லாற்கும் சுத்தமாக உன்னுடைய ராச்சியம் வர உன் மனதின்படி வானத்தில் வானவர்கள் செய்யுமாப் போலே பூமியில் எல்லாரும் செய்ய அன்றுள்ள எங்கள் அப்பம் இன்று எங்களுக்கு தா! எங்கள் பிழை, கடன்காரருக்கு நாங்கள் பொறுக்குமா போலே நீயும் எங்கள் பாவக் கட்ன்களைப் பொறு. எங்களை தோஷத்துக்கு ஏதுவாக ஒட்டாதே. எங்களுக்குப் பொல்லாங்கு வாராமல் விலகு ஆமென்.

மத்தேயு 6.10-12; லூகா 11.2-4

மரியே வாழ்க

கிராசை நிறைந்த மரியாளே!
தம்பிரானுன்னையில் லட்சிக்க *(ரட்சிக்க)* கர்த்தர் உன்னிடத்திலே பெண்சாதிகளில் சுத்தமானவள்

நீயே!

உன்னுடைய வயிற்றில் கனியாகிய
இயேசுவுஞ் சுத்தமானது!

சுத்தமான மரியாள்
தம்பிரானுடைய மாதாவே!

பிழையாளிகளாயிருக்கிற எங்களுக்கு
வேண்டி இப்போதும் எங்கள்
இறுதி காலத்திலும் இரந்து கொள் - ஆமென்.

லூகா 1.28, 42

அரசியே வாழ்க!

இராச கன்னி *(இராக்கினி - அரசி)* இரக்கத்துக்கு
மாதாவே!
தம்பிரான் உன்னையில் லட்சிக்க வாயித்தினுடைய
மதுரமே! எங்கள் பிரமணமே!
தம்பிரான் உன்னை இலட்சிக்க
நாங்கள் அது பாகப்பட்டுத் திரிகிறயேன்
அவையுடை மக்கள் உன்னையே கூப்பிடுகிறோம்
இந்தக் கண்ணீர்த் தலத்தில் உழத்தியும் *(உழத்தல் - வருந்துதல்)*
அழுதும் உனக்கே பெருமூச்சு விடுகிறோம். ஆகை
யினால் எங்களுக்கு வேண்டி மன்றாடுகிறவளே!

உன்னுடைய இரக்கமான கண்கள் கொண்டு திரும்பிப்பார்! அப்படியே இந்தப் பூமியில் அது பாகங்கழிந்த பின் உன்னுடைய வயிற்றில் சுத்தமான கனியாகிய இயேசுவை எங்களுக்குக் காட்டு வையோ மதுரமுள்ள கன்னி மரியாளே! இயேசு கிரீத்துத் தருவோம் என்று சொன்ன நன்மைகள் நாங்கள் பெறத் தக்கதாகத் தம்பிரானுடைய சுத்தமான தாயே, எங்களுக்கு வேண்டி இரந்து கொள். ஆமென்.

குற்ற ஒப்புதல்

நான் பெரும் பிழையாளி. சறுவத்துக்கும் வல்ல தம்பிரானோடேயும் சுத்தமான மரியாளோடேயும் சுத்தமான மிகேல்றுக்காஞ்சு *(மிகேய்ல் ஏஞ்சல் வானத்தூதர் மிகேய்ல்)* வோடேயும் சுத்தமான சுவாம வவுத்தீசுத்தைவோடேயும் பேதுறுவோடேயும் *(பீட்டர்)* சுத்தமான பாவுலுவோடேயும் *(Paul - பால்)* எல்லாச் சொற்கவாதிகளேடேயும் கொம்பஞ்சாரிக்கிறேன் *(Confession - குற்ற ஒப்புதல்)*. அதேனென்றால் நினைவினாலேயும், வசனத்தினாலேயும் நடப்படியினாலேயும் அனேக நன்மைகள் செய்யா திருந்ததினாலேயும் மெத்தப் பிழை செய்தேன். என்பிழை. என்பிழை பெரும் பிழை. ஆகையினாலே சுத்தமான மரியாளோடேயும் சுத்தமான

மிகேல்றுக் காஞ்சு வோடேயும் சுத்தமான சுவாமவ வுத் தீசுத்தையோடேயும் சுத்தமான பேதுறுவேடே யும் சுத்தமான பாவுலு வோடேயும் எல்லாச் சொற்க வாதிகளோடேயும் எனக்கு வேண்டித் தம்பிரா னோடே இரந்து கொள்ளவிருக்கிறேன். பாதிரி யாரே! உம்மோடேயும் என் தோஷங்களின் கட்டவி ழத்தக்கதாக இரக்கிறேன்!

விசுவாச சத்தியங்கள்

கிரீசிதியானிகள் விசுவாசிக்கத் தக்க காரணங்களா வது பதினாலு இதிற் தெய்வீகத்துக்கடுத்து ஏழு, மானு சீகத்தடுத்தது ஏழு, தெய்வீகத்துக்கு அடுத்த ஏழில்

முதலாவது சர்வத்துக்கும் வல்ல தம்பிரான் ஒருவ னையே விசுவாசிக்கிறது.
இரண்டாவது பிதாவினை விசுவாசிக்கிறது
மூன்றாவது மகனென விசுவாசிக்கிறது.
நாலாவது சுத்தமான இசுப்பீரித்தென விசுவாசிக்கிறது
அஞ்சாவது படைக்கிறவன் என்று விசுவாசிக்கிறது
ஆறாவது இலட்சிக்கிறவனென விசுவாசிக்கிறது
ஏழவாது மோக்கிஷம் *(மோட்சம்)* கொடுக்கிறவ னென்று விசுவாசிக்கிறது.

மனுஷ்சீகத்துக்கு அடுத்த ஏழில்

முதலாவது தம்பிரானுடைய மகன் தான் சுத்தமான இசுபீரித்துவினால் சனித்தானென்று விசுவாசிக்கிறது.
இரண்டாவது சுத்தமான கன்னி மரியாள் வயிற்றில் நின்று பிறந்தானென விசுவாசிக்கிறது.

அவள் பெறும் முன்னேயும் கன்னியே! பெறுகிற பொழுதும் கன்னியே! பெற்றதிற்குப் பிறகும் கன்னியே!
மூன்றாவது எங்களுக்கு வேண்டி குருசிலே அறையுண்டு செத்து அடக்கப் பட்டாரென விசுவாசிக்கிறது.
நாலாவது பாதாளங்களிலிறங்கி அங்கே தான் வாரது பார்த்திருந்த சுத்த தயாளராயுமங்களை அற்புமங்களை (ஆத்துமங்களை) ஈடேற்றினான் என்று விசுவாசிக்கிறது.
அஞ்சாவது மூன்றா நாள் செத்தவர்களிடையில் நின்றுயிர்த்தானென்று விசுவாசிக்கிறது.
ஆறாவது வானங்களிலேறிச் சறுவத்துக்கும் நல்ல பிதாவாகிய தம்பிரான் வலப்பாகத்தில் இருக்கிறான் என விசுவாசிக்கிறது.
ஏழாவது நடுத்தீற்கிற காலத்திலே இருக்கிறவர்களுக்கும் செத்தவர்களுக்கும் அவர் அவர் செய்த நன்மை தீமைக்குத் தக்க நடுத்தீற்க வருவானென்று விசுவாசிக்கிறது.

திருச்சபையின் திருச்சடங்குகள்

சுத்தமான இகிரேசையின்
சக்கிறமெந்துகளாவது *(Sacraments)* ஏழு
முதலாவது வவுத்தீசுமு *(Baptismo Baptism - திருமுழுக்கு)*
இரண்டாவது கிரிசி மாரித்தல் *(Charisma)*
மூன்றாவது சாந்து சாக்கிறமெந்து *(Sacrament)*
நாலாவது கொம்பெசா ரித்தல் *(Confession)*
அஞ்சாவது எசித்திரெமவுஞ்சாம *(Extreme Unction, நோயில் எண்ணெய்ப் பூசுதல்)*
ஆறாவது ஓடுதென் *(Order, Holy - குருத்துவம்)*
ஏழாவது மத்திரிமோனியு *(Matrimony - திருமணம்)*

பெரும்பாவங்கள்

தலையான பாவங்களாவது ஏழு
முதலாவது அகந்தை
இரண்டாவது அவரொசை *(Averza / avarice - லோபித்தனம்)*
மூன்றாவது மோகம்
நாலாவது கோபம்
அஞ்சாவது கொதி *(மீதூண் விரும்பல்)*
ஆறாவது காய்மகாரம் *(பொறாமை)*
ஏழாவது சோம்பல்

தலையான் பாவங்களுக்கு எதிரான
நன்மைகளாவது

அகந்தைக்கு எதிர் எளிமை
அவரெசைக்கு எதிர் ஈகை
மோகத்துக்கு எதிர் சித்திநாதி *,Castidade chastity - கற்பு)*
கோபத்துக்கு எதிர் பொறுதி
கொதிக்கு எதிர் தேம்போர்ஞ்சை *(Temperance)*
காய்மகாரத்துக்கு எதிர் அன்பு
சோம்பலுக்கு எதிர் முயற்சி

இரக்கம் கொள்ளல்

இரக்கத்தின் நடபடிவகளாவது பதினாலு
இதில் உடலுக்கானது ஏழு
ஆற்யுமத்துக்கானது ஏழு

உடலுக்கான ஏழில்

முதலாவது கிலேசக்காறனெச் சென்று மினவுகிறது *(சந்தித்தல், வினவுதல்)*
இரண்டாவது பசித்தவர்களுக்குப் பசியாற்றுகிறது
மூன்றாவது தவிச்சவர்களுக்குத் தாபம் தீர்க்கிறது
நாலாவது சிறைபட்டிருக்கிறவர்களை மீளுகிறது
அஞ்சாவது கூறையில்லாதவற்கு கூறை கொடுக்கிறது
ஆறாவது அகுதி *(அகதி)* பரதேசிகளுக்கு விடுதி கொடுக்கிறது.
ஏழாவது செத்தவர்களை அடக்கிறது.

ஆற்யுமத்துக்கான ஏழில்

முதலாவது அறியாதவர்களைப் படிப்பிக்கிறது
இரண்டாவது புத்தி வேண்டின பேர்களுக்கு நல்ல புத்தி சொல்லிக் கொடுக்கிறது.
மூன்றாவது குற்றப்படுத்த வேண்டும் பேர்களை குற்றப்படுத்துகிறது.
நாலாவது அவனவன் செய் அதருமம்பாடுகளை பொறுக்கிறது
அஞ்சாவது அவனவன் செய்த குற்றங்குறைகளை மனதில் காணாமல் இருக்கிறது
ஆறாவது சலிப்புள்ள பேர்களுக்கு சலிப்பு தீர ஆறுதல் சொல்கிறது
ஏழாவது இருக்கிறவர்களுக்கும் செத்தவர்களுக்கும் வேண்டி தம்பிரானை இரந்து கொள்ளுகிறது.

புலன் ஐந்து

உடலுக்குள்ள பூதியங்களாவது அஞ்சு
(பூதியம் - உடல் வளர்ச்சி)

முதலாவது பார்வை
இரண்டாவது கேள்வி
மூன்றாவது வாதினை *(முகர்தல்)*
நாலாவது சுவை
அஞ்சாவது தடவுதல்

இறையியல் ஒழுக்கம்

தேயோளோகாயிசான *(Theological)*
விருத்தூதை (Virtue - ஒழுக்கம்) களாவது மூன்று

விசுவாதம்
நம்பிக்கை
அன்பு

முதன்மை ஒழுக்கம்

*தலையான விருத்தூதை(Virtue)*க்களவது நாலு

புத்தி
நியாயம்
மனமிடுக்கு
தேம்பொரஞ்சை *(Temperance)*

ஆத்துமத்தின் பகைவர்கள்

ஆத்துமத்துக்குச்
சத்துருக்களாவது மூன்று

பூலோகம்
உடல்
பேய்

இறுதி

இறுதியானவையாவது நாலு

மரணம், நடு, நரகம், சொற்கம்

எட்டு பாக்கியங்கள்

நம்முடைய நாயன் இயேசு கிறிஸ்து
ஒரு முறை அறிவு திருவுள்ளம் பற்றின பொழுது
மோக்கிஷப் பேர்களில் எட்டு
வகை அறிவித்தார் அதில்

முதலாவது மனதிலே மிடியராய் இருக்கிறவர்கள் மோக்கிஷப் பேர்களாய் இருக்கிறார்கள். அதே னென்றால் அவர்கள் வானங்களில் இராச்சியத்துக் குடையவர்கள்.

இரண்டாவது அமைந்து நடக்கிறவர்கள். மோக்கி ஷப் பேர்களாய் இருக்கிறவர்கள் அதேனென்றால் அவர்கள் பூமியை ஆண்டிருப்பார்கள்.

மூன்றாவது அழுகிறவர்கள் மோக்கிஷப் பேர்க ளாய் இருக்கிறார்கள். அது ஏனென்றால் அவர்கள் சந்தோஷப்பட்டிருப்பார்கள்.

நாலாவது நியாயம் நடக்க வேணுமென்று பசி தவ னம் *(தாகம்)* உண்டாயிருக்கிறவர்கள் மோக்கிஷப் பேர்களாய் இருக்கிறார்கள். அதேனென்வென்றால் வனம் தீர்ந்து சம்பூர்ணமாயிருப்பார்கள்.

அஞ்சாவது இரக்கமுள்ளவர்கள் மோக்கீஷப் பேர்க ளாய் இருக்கிறார்கள். அதேனென்றால் அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

ஆறாவது மனசுத்தமாயிருக்கிறவர்கள் மோக்கிஷப் பேர்களாயிருக்கிறார்கள். அதேனென்றால் அவர் கள் தம்பிரானைக் காண்பார்கள்.

ஏழாவது துறவுக்குத் தெண்டிக்கிறவர்கள் மோக்கிஷப் பேர்களாய் இருக்கிறார்கள். அது ஏனென்றால் அவர்கள் தம்பிரானுடைய மக்க ளென்று பேர்ப்படுவார்களே.

எட்டாவது நியாயத்துக்கு வேண்டிப் பாடுபடுகிற வர்கள் மோக்கிஷப் பேர்களாயிருக்கிறார்கள். அது ஏனென்றால் அவர்கள் வானங்களில் ராச்சியத்துக்கு டையவர்கள்.

இதுதவிர நமக்காக வேண்டி மனுஷருங்களைத் திட் டும் பொழுதும் நெருக்கஞ் செய்யும் பொழுதும், பொல்லாங்கெல்லாம் உங்களைக் கொண்டு பொய் யாகச் சொல்லும் பொழுதும் மோக்கிஷப் பேர்க ளாய் இருக்கிறீர்கள்.

உள்ளம் கனிகூர்ந்து சந்தோஷமாயிருங்கோள். அதேனென்றால் வானங்களில் உங்கள் பேறு மிகுதி உண்டாயிருக்கிறது.

இவையெல்லாம் நம்முடைய நாயன் இயேசு கிரீத்து திருவுள்ளம் பற்றினது.

ஆமென்
இயேசு

தம்பிரான் வணக்கம்
தமிழ்ப் பதிப்பாசிரியர்

'தம்பிரான் வணக்கம்' தமிழாக்கி, பதிப்பித்தவர் அண்டிறிக்கி பாதிரியார் (Henriq Henriquez). இவர் பெயர் போர்த்துகீசிய மொழியில் Antrique Antriquez என்றெழுதப் பெறும். ஆங்கிலத்தில் 'அ', 'ஹ' ஆகிப் போகும். அதையொட்டி அவர் பெயரை ஹென்றிகு என்றும் எழுதுவர்.

அண்டிறிக்கி (1520 - 1600) போர்ச்சுகல் நாட்டு எவோரா மாவட்டத்தில் விகோசா கிராமத்தில் பிறந்தார். பயின்றது கொய்ம்பரா (Coimbra) பல்கலைக் கழகம். அண்டிறிக்கி யூதர், மதம் மாறி, இயேசு சபையின் கிறித்துவ ஊழியரானார். தம் சொத்துக்களை, ஏழை மக்களுக்கு அளித்துவிட்டு தம் 26-ம் வயதில் இந்தியா புறப்பட்டார்.

தென்னிந்திய மேற்குக் கடற்கரை மக்கள் அவரது மனம் கவர்ந்தார்கள். பின் மக்களின் மனதை அவர் வென்றார். தமிழ்ப் பரவர் மக்களை கிறித்துவ வழிக்குத் திருப்புவது அவரது பணி.

அண்டிறிக்கி தம் 80-ம் வயதில் கி.பி.1600 பிப்ரவரி 6-ம் நாள், புன்னைக்காயவில் உயிர் நீத்தார். கடற்கரைத் தமிழ் மக்கள் கண்ணீர்க் கடலில் மூழ்கினர். காயல்பட்டின இஸ்லாமியர் உண்ணாதிருந்து துயர் அனுசரித்தனர். இந்துக்கள் இரு தினங்கள் உண்ணவில்லை. கடை கன்னிகளைத் திறக்கவில்லை. கடைவீதியே மவுனமாயிற்று. தூத்துக்குடியில் சவ அடக்கம். அந்நகரமே அன்றுவரை காணாத பெருந்திரளான இரங்கல் ஊர்வலம். அடக்கம் பண்ணுவது கடும் சிரமமாகிப் போயிற்று. ஒவ்வொருவரும் அவருடலைத் தொட்டுக் கும்பிட ஆவேசப்பட்டனர். அவரது நினைவாக அவருடலிலி

ருந்து ஒரு பூவையேனும் எடுத்துக் கொள்ள முயன்றனர்.

தூத்துக்குடி மாதா ஆலயத்தில் அண்டிறிக்கியின் எலும்புகள் ஒரு கண்ணாடிப் பேழையில் வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழிக்கு புகழ் சேர்த்த அண்டிறிக்கி பாதிரி காலமானார். ஆயினும் தமிழ்மொழி வாழும் நாள் வரை அவர் பெயர் வாழும்.

அண்டிறிக்கி தமிழரிடத்துப் பணியாற்றி தமிழ் கற்றார். பழக்கத்தில் இருந்த மொழி நடை மீதே அவருக்குப் பற்றுதல். நாளடைவில் போர்த்துக்கீசிய மொழியில் பேசுவதையே தவிர்த்தார். ஆமென் என்பதை ஓம் எனச் சொல்லச் சொல்வாராம் அவர். தொடக்க நாள் முதல் அவர் குறித்து வைத்துக்கொண்டு வந்த தமிழ்ச் சொற்கள் வளர்ந்து திரண்டு ஓர் அகராதி அளவு ஆயின.

அண்டிறிக்குவின் அகராதி 1549 வாக்கில் நிறைவுற்றது. எனினும் அது முதல்வரைவுதான். மேலும் மேலும் திருத்தங்கள் செய்துகொண்டே இருந்தார் அவர்.

அந்நாளில் தமிழ் அச்செழுத்து ஆக்கப்படவில்லை. ஆதலால் போர்ச்சுகல் நாட்டில் ரோமன் தமிழிலாவது அது வெளிப்பட வேண்டும் என்று பெரிதும் முயன்றார். அவரது முயற்சி தட்டிப்போயிற்று. எனினும் பின்னர் தொகுக்கப்பட்ட தமிழ் - போர்த்துகீசு அகராதிக்கு அது அடிப்படை ஆகி இருக்கலாம்.

தமிழ் மொழி இலக்கணம் எழுதவும் முயன்றார் அண்டிறிக்கி. கிறித்துவப் பாதிரிமார்க்கும், ஊழியர்க்கும் அந்நூல் உதவும் என்பது அவரெண்ணம்.

தமிழ்மொழிக்கென ஒரு பல்கலைக் கழகம் அவரது நெடுங்க

னவு. அது நிறைவேற 400 ஆண்டுகாலம் ஆகிப் போயிற்று.

அண்டிறிக்குவின் நூல்கள் தமிழ் வரலாற்றின அச்சுயுகப் பகுதியின் முதற் பக்கத்தில் கம்பீரமாகக் கொலுவிருக்கின்றன. அவரது கடிதங்கள் இந்திய போர்த்துக்கீசிய, மற்றும் கிறித்துவ சமய வரலாற்றுக்கு ஆதாரத் தரவுகள். கோவா, கொச்சி, கடியபட்டினம், கன்னியாகுமரி, மன்னார், பெரியதாழை, பட்டணம், புன்னைக்காயல், தூத்துக்குடி, வேம்பாறு ஆகிய தலங்களிலிருந்து அவரெழுதிய சுமார் 70 கடிதங்கள் தமிழ், தமிழர் பண்பாட்டு வரலாற்றுக்கு இன்றியமையாதவை.

16-ம் நூற்றாண்டு கிறித்துவ ஊழியர்களுள் பலமொழி வல்லார் அண்ட்றிக்கி அவர் சீன, ஜப்பானிய, எதியோப்பிய மொழிகள் அறிவார். அம்மொழிகளிலும் நூல் படைத்தார் அவர். மேலும் சீன, ஜப்பான் மொழிகளுக்கு இலக்கணங்கள் எழுதவும் முயன்றார் அவர்.

அன்னைத் தமிழுக்கு அருந்தொண்டாற்றிய அயல்நாட்டு அறிஞர்கள் பலர். பெஸ்கி எனும் வீரமா முனிவர், கால்டுவெல், ட்ரூ, எல்ல்ஸ், மர்தோக், நொபிலி, பெர்சிவல், போப், ரெய்னியஸ், ராட்லர், வின்ஸ்லோ, ஜிகன்பால்கு என்று அப்பட்டியல் நீளமானது. புகழ் மின்னும் இத்தமிழ் ஊழியர்களுக்கு முதல் முன்னோடி அண்ட்றிக்கு.

இந்திய மொழிகளுக்குப் பணியாற்றிய அயல்நாட்டுப் பெருமக்களுள்ளும் அவரே முதலாமவர்.

16-ம் நூற்றாண்டு இறுதிக்குள் இந்தியா முழுவதும் அச்சேறிய நூல்கள் ஒரு சிலவே. அவற்றுள் மிகப் பெரிய நூல் படைத்தவர் அண்டிறிக்கி அவர்களே! அது பிளாஸ் சாங்க்டோரம் (Flos Sanctorum 1586) மொத்தப் பக்கங்கள் 684.

முறையே தமிழ் கற்ற முதலாவது ஐரோப்பியர் அண்றிக்கி.

முதல் தமிழ் அச்சு நூலினை மொழிபெயர்த்தவர் அண்டிறிக்கி. முதல் தமிழ் நூலைப் பதிப்பித்தவர் அண்டிறிக்கி! முதல் தமிழ் அச்சகத்தை நிறுவியதும் அண்டிறிக்கி அவர்களே!

அண்டிறிக்கி பல்மொழிகள் பயின்றவர். பல மொழிகளில் நூலாக்கியவர். எனினும் தமிழின் மீது மிகு பற்று கொண்டிருந்தவர். அவரது தமிழ் நூல்களில் இன்று காணக்கிடப்பவை நான்கு.

1. தம்பிரான் வணக்கம் (1578)
2. கிரிசித்தியானி வணக்கம் (1579)
3. கன்பெசனரியோ (1580)
4. அடிகளார் வரலாறு (1586)

அண்டிறிக்கி நூல்களில் இன்னும் தேடப்பட வேண்டியவை நான்கு.

அடியார்களின் சகோதரத்துவம்
கிறித்துவின் வரலாறு (ஒரு பகுதி)
தமிழ் - போர்ச்சுகீசிய அகராதி
கிறித்துவத்தின் எதிர்க்கதைகளுக்கு மறுமொழி.

தம்பிரான் வணக்கம்
அச்சு விவரம்

(தம்பிரான் வணக்கம் / மொத்த பக்கம் 16 / அளவு 10 x 14 செ.மீ. / வரிகள் பக்கத்திற்கு 24

தமிழ் மொழியின முதல் அச்சு நூலிலேயே, தமிழ் நூல்களின் மேலட்டை ஓவிய வழக்கம் தொடங்கிவிட்டது. தம்பிரான் வணக்கத்தில் காணும் அட்டை ஓவியம் 8 x 10 செ.மீ. அளவினது. இது மரச் செதுக்கு ஓவியம். அதில் -

கடவுள் சொர்க்கத்தில் வீற்றிருக்கிறார். அவருக்கு அருகே வலப்புரத்தில் அவரது திருக்குமாரன் இயேசு. இருவரது கண்ணும் கணிவாய், சற்றே தாழப்பார்க்கின்றன. அவர்கள் பார்வையில் அடியார்கள், பெருமக்கள். அம்மக்கள் கைகளில் குருத்தோலைகள். குருத்தோலை (palm) வெற்றியின் சின்னம். இயேசு மீட்டுயிர்த்து எழுந்த நாள் குருத்தோலைத் திருநாள் (Palm Sunday).

தம்பிரான் வணக்கத்தை அலங்கரிக்கும் ஓவியம், அதற்கு முன் நூல் எதனிலும் காணப் பெறவில்லை. ஆனால், அதற்குப் பத்தாண்டுகளுக்குப் பின் வெளியான இரண்டு நூல்களில் (1588, 1590). அது மீண்டும் பயன்படுத்தப் பட்டதெனத் தெரிகிறது. அவை போர்த்துகீசிய மொழி நூல்கள். ஒன்று ஜப்பானியருக்கானது. அவை ஹாங்காங் நகருக்கு மேற்கே இருந்த இன்னொரு துறைமுக நகரமான மகாவில் (Macao) அச்சாயின. மகாவ் அக்காலம் போர்த்துகீசியர் வசமிருந்தது.

அட்டை ஓவியத்திற்கு மேலே

DOCTRINA CHRISTAM
En Lingna Malauar Tamil

என்று போர்த்துகீசிய மொழியில் தலைப்பு. கீழே -

அண்டிறிக்கிப் பாதிரியார்
தமிழிலே பிரித்தெழுதின
தம்பிரான் வணக்கம்

என்று நூலாசிரியர் பெயர்.

தம்பிரான் வணக்கத்தின் முதல் சொல் கொம்பஞ்சியோ. 'கொ' வின் கொம்பு பெரிதாக அலங்கார எழுத்தாய் செதுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பக்கம் போர்த்துக்கீசிய மொழியில் அமைந்த நூல் விவரத்தில் Doctrinaவின் Dயும் பெரிய எழுத்தாய் உள்ளது. நூலின் இரண்டாம் பக்கம் நூல் அச்சான ஆண்டு.

கூ ரு ள எ ய அ ம் வருஷம்
அப்பிசை மாதம் 20

தமிழ் எண்மானம் இவ்வாறு

கூ - 1000
ரு - 5
ள - 100
எ - 7
ய - 10
அ - 8
கூ (1000) + ருள (5x100 = 500) + எய (7x10 = 70) + 8 = 1578

கீழே மீண்டும் லத்தின் முறையில் அச்சு ஆண்டு

M.D. LXX, VIII

M - 1000

D - 500

L - 50

X - 10

V - 5

I - 1

M (1000) + D (500) + LXX (70) + VIII (8) = 1578

மூன்றாம் பக்கம் Pello Final எனும் தலைப்போடு 'சுத்தமான குருசின் அடையாளத்தால்' எங்கள் சத்துருக்கள் எங்கள் மேல் வாராமல் காத்துக் கொள் எங்கள் தம்பிரானே என்று தொடங்குகிறது. இப்பகுதியும் சேர்ந்து, மொத்தம் 18 தலைப்புகள். தலைப்பு யாவும் போர்த்துகீசிய மொழியில்.

பதினைந்தாம் பக்கம்

இயேசு கிறீசுத்து திருவுள்ளம் பற்றினது

ஆமென் - இயேசு

என்று நிறைகிறது.

பதினாறாம் பக்கம், தமிழ் அச்செழுத்து அட்டவணை. இது தமிழ் அச்செழுத்து வரலாற்றின் ஊற்றுக்கண்ணைத் திறந்து காட்டுகிறது. 'கோவாவில் உண்டாக்கின எழுத்து' என முதல்வரி தமிழிலும், அடுத்த வரியில் அதே செய்தி போர்த்துகீசிய மொழியிலும் காண்கிறது. 'பத்தாம் வரி போர்த்துகீசிய மொழியில் கொல்லத்தில் உண்டாக்கின எழுத்து' என்று! பதினோராம் வரி, அதே செய்தி தமிழில். இருபத்து மூன்றாம் வரியில் தமிழ் எண் வரிசை 1,2,3,4,5, 6,7,8,9,10, 100, 1000, இருபத்து நான்காம் வரி போர்த்துகீசிய மொழியில் ஆமென் என்று நிறைகிறது.

கோவா எழுத்து, கொல்லம் எழுத்து என்று போர்த்துகீசிய

மொழியில் வரும் இரண்டு வரிகளும்.

கோவா எழுத்து 1577
கொல்லம் எழுத்து 1578

என்று தமிழ் அச்செழுத்து முதன் முதல் ஆக்கப்பட்ட காலத்தைத் தெளிவாய்க் காட்டுகின்றன.

நூல் முழுவதும் கொல்லம் எழுத்தில் தான் அச்சிடப் பெற்றுள் ளது. கோவா எழுத்து, மாதிரிக்காக, முன் முயற்சி பற்றிய நினைவுக் காக, ஒப்பீட்டுக்காக காட்டப்பட்டிருக்கிறது.

தம்பிரான் வணக்கம் முதலில் போர்த்துக்கீசிய மொழியில் அச் சாயிற்று. அடுத்து அச்சான மொழி தமிழ். பிறகே, உலகின் வேறு மொழிகளில் அச்சானது.

1578 - தமிழ்; 1584 - ஸ்பேனிஷ் மொழி; 1592 - ரோமானி, 1592 - ஜப்பானிய மொழி.

● தமிழ் அச்சு வடிவச் சாதனை நிகழ்வதற்கு ஊக்கியாய் அமைந்த வர் பாதிரி வாலிக்னானி.

தீரமும் மேன்மை குணமுமுள்ள வாலிக்னானி அலெக்சான் டரோ தமது 36-ம் வயதில் இந்தியா வந்தார் (1574). இந்தியக் கிறித்துவ ஊழியர்களுக்கு மேல் அதிகாரி போல அவர். அவர் தம் துணைவர்களுக்குச் சொன்ன அறிவுரை:

இந்தியரிடையே ஒரு இந்தியனாக இரு; ஜப்பானிரிடையே ஒரு ஜப்பானியனாக இரு; சீனக்காரரோடு ஒரு சீனக்காரனாக இரு; உன்னை உள்ளூர்காரனாக மாற்றிக் கொள்.

வாலிக்னானி கீழை நாடுகளின் கிறித்துவ ஊழியர்களின்

மாநாடு ஒன்றை கோவாவில் கூட்டினார் (1575). அந்த சமயத்தில் தான் ஆண்டிறிகுவின் தமிழ் அச்சு நூல் வேண்டுகோள் ஏற்கப்பட்டது. தமிழ் அச்சுப் பொறுப்பும் அண்டிறிக்குப் பாதிரியிடம் ஒப்படைக்கப்பட்டது. அடுத்த ஓரிரு ஆண்டில் தமிழ் மொழி அச்சு வடிவம் கண்டது.

வாலிக்னானி கிழக்காசிய இயேசு சபை முழுதுக்கும் ஆலோசகர்; ஆய்வாளர். தம்பிரான் வணக்கம் இந்தியாவில் அச்சானதும், அந்நூலின் மேலட்டையில் இந்த மரச்செதுக்கு ஓவியத்தை அவர் மகாவ் கொண்டு சென்றார். அதனால் தான் அங்கு பதிப்பான இரு நூல்களில் அதே ஓவியத்தைக் காண முடிகிறது. அந்த மர அச்சு ஓவியத்தை, அவர் போர்ச்சுகலில் இருந்து கொண்டு வந்தார் என்பார்.

தம்பிரான் வணக்கம்

அச்சுத்தாள்

தம்பிரான் வணக்கம் அச்சானது சீன தேசத்து தாளில் என்பர். அவ்வாறு உறுதி செய்யக் காரணங்கள் -

16-ம் நூற்றாண்டு தொடக்கம் போர்த்துகீசிய சீனா தொடர்பு இருந்தது: இந்திய நாட்டில் காஷ்மீரில் தான் முதல் முதல் தாள் பயன்படுத்தப்பட்டது. சாமர்கண்ட் வழியாக, வந்த சீனத்தாளே அது. 16-ம் நூற்றாண்டளவில் இந்தியா முழுவதும் தாள் ஆலை எதுவும் இல்லை.

தம்பிரான் வணக்கம் அச்சான தாளின் ஆக்கம், சீனருக்கே, உரித்தானது. சீன தேசத்து முறையிலானது. சீனத் தயாரிப்பில் நூலிழைகள் பயன்படுத்தப்பெறும். மற்ற நாடுகளின் தயாரிப்பில் மூங்கில் மற்றும் தாவரப் பொருட்களே அடிப்படை.


கோவா எழுத்தும்
கொல்லம் எழுத்தும்

கோவா, கொல்லம் எழுத்துகள் இக்கால எழுத்துகள் போல் இல்லை. அவற்றில்

- மெய்யெழுத்துக்குப் புள்ளியில்லை
- குறில் நெடில் வேறுபாடு துலக்கமாய் இல்லை.
- நெடில் சில கூட்டெழுத்தாய் உள்ளன.
- அ.நு.து. போன்றவற்றிற்கு கீழ் வயிறு இல்லை.
- சொல்லுக்கு சொல் இடைவெளியில்லை.

கூட்டுச் சொற்களாய் காண்கின்றன.

கோவா எழுத்து




கோவா, கொல்லம் இரு தமிழ் அச்செழுத்தும் அக்காலத் தமிழ்க் கல்வெட்டு, செப்பேடு, ஓலைச்சுவடி எழுத்தின் வரி வடிவத்தைப் பின்பற்றுகின்றன.

கோவா (1577), கொல்லம் (1578) எழுத்துக்களுக்கிடையே ஓராண்டு காலம் தான் இடைவெளி ஆதலின் எழுத்து மாற்றம் / வரி வடிவ வளர்ச்சி எழுதவும் பெரிய அளவுக்கு இல்லை. எனினும் சில வித்தியாசங்கள் தென்படுகின்றன.

கோவா எழுத்து சற்றே பெரியது. திண்ணியது வளைவு மிகுந்தது. கொல்லம் எழுத்து சற்றே சிறியது சன்னமானது. வளைவு குறைந்தது. திட்பமானது.

கொல்லம் எழுத்து



கோவா அகர வரிசையில் 'ஈ' எனும் தனி எழுத்து இல்லை. 'இ'யே மேல் சுழியிட்டு நெடிலாகக் காட்டப்பட்டுள்ளது. கொல்லம் எழுத்தில் ஈ தனியெழுத்து.

கோவா எழுத்தில் தா தனியெழுத்து
கொல்லம் எழுத்தில் தா கூட்டெழுத்து

கோவா எழுத்தில் கீழ் விலங்குள்ள 'ர' காணலாம்.

கொல்லம் எழுத்தில் 'ர' கீழ்விலங்கற்று 'ர' என்றிருக்கிறது.

சற்றே நெகிழ்ந்த 'ர'வே கோவா எழுத்தில் ற நெடில் 'ரு'

கொல்லம் எழுத்தில் 'ரர' என்பதே நெடில் ரா.

கோவா எழுத்துதான் முதல் தமிழ் அச்செழுத்து. ஆக்கியவர் சகோதரர் கொன்சால்வசு (Joao Goncalves) ஸ்பேனிஷ்காரர். சிறந்த கருமான். கடிகாரம் செய்வதில் நிபுணர். அத்துறை அனுபவம் அவருக்கு அச்செழுத்து ஆக்கத்தை எளிதாக்கியிருக்கும். 1576 நிறைவு 1577 தொடக்கம் தமிழ் முதல் அச்செழுத்தை வடித்தார் அவர். அவரது எழுத்தை நாம் கண்ணிற் காண முடிகிறது. (தம்பிரான் வணக்கம் பக்கம் 16) நூலாகக் காண முடியவில்லை.

இப்போது, தமிழ் முதல் அச்சு நூல் என்று அறியப்படுவதில் ஆளப்படும் எழுத்து கொல்லம் எழுத்து கொல்லம் எழுத்தைப் படைத்தவர் சகோதரர் பாரியா (Faria)

கோவா எழுத்தில் அச்சிடப்பட்ட நூல் எதுவும் இதுவரை அறியப்படவில்லை. கொல்லம் எழுத்தில் தம்பிரான் வணக்கத்தைத் தொடர்ந்து கிரீசித்தியானி வணக்கம். பின், கன்பெசனாரியோ ஆகிய நூல்கள் வெளியாயின. தொடக்க எழுத்து அலங்கார பெரிய எழுத்தாக அமைவதும் அயல்மொழிச் சொற்களை தனி அடையாள மிட்டு குறிப்பதும் இம்முடிவுக்கு வர சான்று.

தமிழ் மொழியின் இரண்டாவது அச்சுப்புத்தகம்

கிரிசித்தியானி வணக்கம்
Doctrina Christina

தமிழ் மொழியின் இரண்டாவது அச்சுப்புத்தகம், கிரிசித்தியானி வணக்கம்.

1579 நவம்பர் 14
அளவு - 10 x 14 செ.மீ.
பக்கம் - 4 + 112
வரிகள் பக்கத்திற்கு - 24

இடம்- கொச்சி
College of the Mother of God.

கிரிசித்தியானி வணக்கம் ஒரு தமிழாக்க நூல்தான். முதல் நூலின் ஆசிரியர் போர்த்துகீசிய யேசு சபை பாதிரியார் மார்கோ ஜோர்ஜ் (Marcos Jorge Doctrina Christa Ordenada a Maneira de dialogo Para ensinar os meninos)

1561-ல் லிஸ்பனின் வெளியான இந்நூலை போர்த்துகல், இந்தியப் பாதிரிமார்கள் பரவலாகப் பயன்படுத்தினர். தேவை கருதி, அதனைத் தமிழாக்கியவர் தமிழ் முதல் அச்சு நூலைப் பதிப்பித்த அண்டிறிக்கி அவர்களே.

கிரிசித்தியானி வணக்கம் கொச்சியில் அச்சானது. அதற்கு பெரியா (Faria) கொல்லத்திலுண்டாக்கிய எழுத்துக்களே பயன்பட்டன. அச்சு 1579 நவம்பர் 14-ல்.

1928-ஆம் ஆண்டு, சோர்போன் நூலகத்தில் கிரித்தியானி வணக்கத்தை கண்டு, முதன் முதலில் அதை பதிவு செய்தவர் பாதிரியார் ராபர்ட் ஸ்ரெய்ட் (Robert Streit - Bibliotheca Missionum தொகுதி

4 பக்கம் 145 1928). மார்கோ ஜோர்ஜ் பாதிரியாரின் டாக்ட்ரினா கிறிஸ்டினாவின் தமிழாக்கம் அது.

> தமிழில் அண்டிறிக்கு பாதிரி ஆண்டு 1579 'எண்ணி டாத நான்கு தாட்களும் எண்ணிடப் பெற்ற 112 பக்கங் களும், உரையாடலாய அமைந்திருக்கிறது'

நூல் என்கிறது அப்பதிவு. சூர் ஹேமர் (G. Schurhammer) 1944-45-ல் எழுதிய ஆய்வுரை ஒன்றில் (Monumenta Historica Societies Jesu, 67-68 Rome) 1945 - 45, தொகுதி 2 பக்கம் 585) அந்நூலின் முழு விவரங்களும் தரப்பட்டுள்ளது.

சோர்போன் நூலக கிரிசித்தியானி வணக்கம் 1950-களில் காணாமற் போயிற்று. இப்போது சூர்ஹேமர் எடுத்த போட்டோ பிரதியே நாம் காணக் கிடைப்பது.

கிரித்தியானி வணக்கத்தின் மற்றொரு பிரதி 50-களில், பெல்ஜியம் நாட்டு எங்கியன் (Enghien) நகர் யேசு சங்கத்தின் நூலகத்தில் காணப்பெற்றது. பின்பு அந்நூல் சான்டலி (Chantilly) நூலகத்திற்கு அனுப்பப் பெற்றது. அறுபதுகளுக்கு அப்புறம் இந்தப் பிரதியும் காணாமல் போயிற்று.

இவ்விரு பிரதிகளும் காணாமற் போயினும், தமிழ்நாட்டு கிறித்துவ சபை எதிலேனும் இந்நூல் பிரதி இருக்கக் கூடும் என்கிறார் சூர்ஹேமர்.

போதலெய்ன் (Bodlein) நூலகத்தில் 1979-ம் ஆண்டு கிரஹாம் ஷா (Graham Shaw) கிரித்தியானி வணக்கத்தின் இன்னொரு பிரதியைக் கண்டறிந்தார். முன்னர் அறியப்பட்ட பிரதிகள் காணாமற் போன நிலையில் இதுவே ஒரு தங்கப் புதையல் போல.

இப்பிரதியோடு இன்னொரு நூலும் ஒன்றாக வைத்துத் தைக்கப் பட்டிருந்தது. அது 'கன்பெசனேரியோ' என்னும் தமிழ் நூல் போதிலெய்ன் நூலகத்தில் இப்பிரதி 1615 முதலே இருந்தது.

DOctrina Christã, a maneyra de Dialogo. feyta em Portugal pello padre Marcos Iorge da Companhia de IESV: Tresladada em lingua Malauar Tamul. pello padre Anrique Anriquez da mesma Cõpanhia. Impressa cõ approvação do Ordinario, & Inquisidor, & cõ licença do superior. Em Cochim no Collegio da Madre de Deos. aos quatorze de Nouẽbro do Anno de

M . D . L X X I X .

Vão nesta doctrina alguns vocabulos, os quais, pera se conhecer não são Malauares, se lhe pos esta sinal † como: † Graça: † Igreja. &c.

ந

அதாவது நூல் அச்சிடப்பட்ட 35 ஆண்டுகளில் இந்திய அச்சுக் கலை வரலாறு (History of Printing and Publishing in India - 1985) சோர்போன் நூலகத்தில் இருந்த கிர்த்தியானி வணக்கத்தின் இரண்டு பக்கங்களைக் காட்டுகிறது. அவை இரண்டாம் மூன்றாம் பக்கமாக லாம். அவற்றுக்கு எண்ணிடப் பெறவில்லை. போன்றே மேலட்டை எதுவென அறியக் கூடவில்லை. காட்டப்பெறும் இரு பக்கங்களும் சூர்ஹேமரின் போட்டோப் பிரதியின் நகல்களாம்.

முதற்பக்கம் முழுவதும் போர்த்துகீசிய மொழி. மார்கோ ஜோர்ஜ் அவர்களின் நூலை அண்டிறிக்கி தமிழாக்கினது. கொச்சி (College of Mother of God) கல்லூரியில் அச்சிடப்பெற்றது. ஆண்டு 1579. எனும் விவரம்

அடுத்த பக்கம் முகவுரை.

> நம்முடைய நாயன் இயேசு கிறித்து பிறந்த வருஷம் 1579
> கிரிசித்தியானிகளுக்கு.
> யாதாம் ஒருத்தர் தங்கள் மக்களுக்கு.
> பிள்ளைகளுக்கு நம்முடைய சுத்தமான கிரித்தியானி.

என்றவாறு காண்கிறது.

அச்சும் பதிப்பும் (1980) நூல், 1579-ல் கொச்சியில் வெளி யான கிரிசித்தியானி வணக்கம் நூலின் மாதிரி பக்கங்கள் இரண்டைக் காட்டுகிறது.

> கிரிசித்தினியானிகளுக்குள்ளப் படிப்பினை இந்தப் பொத்தகத்திலேயே எழுதியிருக்கிறது. அதைப் பிள் ளைகளுக்கு நன்றாய்ப் படிப்பிக்கத் தக்கதாக, வாத்தி யார் சீடனைக் கேட்க, கேட்டதுக்கெல்லாம் சீசன் பிரதி யுத்திரம் சொல்லும் வகையிட்டிருக்கிறது.
>
> முதலதிகாரம் இதில் கிர்த்தியானியென்கிற சொல்லுக் குப் பயனெழுதியிருக்கிறது.

ரிசததியானிக ளாகுற [illegible]
படிபபினை யிரு[illegible]
ழுததிலெ யெழுதியிருககிற
அதைபபினவர்கள் கருககுளா
முயயபபடிபபிககததநகக[illegible]
ளாநதியானசீஷிககுக [illegible]
[illegible] மெகலலாருசீஷிணபிரததியுநதாரு
சொலலுமவகையி—டிருககிறது -

Capitulo Primeyro, que quer dizer Christão.

¶ முதலததிகாரமிதிலககிரிசததியானி
யெனகிறசொலலுககுபபய
னெழுதியிருககிறது

தமபிராணவணககமபடி [illegible] பிககிற
நலததிலெ பிளளைக ளெ[illegible] ருங
கூடிமறுல யாகவாததிய [illegible]
சுவவாயசசொலலிகக [illegible]
யி—டு ததாமுமொகக [illegible]
வனைய வெணும - அதா [illegible]

Pell' sinal.

¶ சுததமானசிருசினா
¶ அடையாளததால
¶ எஙகளசததுருககள

A. I.

- முகவுரை -

லெயிநதயபொததகமுணடாககிறுப
பொலெயதைநமமுடையகொமபறு
ஞையியிவளபபடடுவணடிரீககிப
பாதிரியாருஙகள தமிழபாஷைசை
யிலெபிரதெழுதவுஞசெயதார அவ
ருமநனறாயபபிரதெழுதுமபடிககுத
தமிழா நனறாயறிநதசிலகலவிமானகளை க
கொணடுதமிழுககு நனறாயினஙக க
தககசிலவாததைசாவைதீாதநுககொண
டுயிடடுகளவாராமலெககமெலலாந
தெணடுததாசபபடியெநமமுடைய
கொமபனுஞையியிவளபபடடெவெறு
பாதிரியாாசசிலெநனறாயபபதிககிறுக
குபெறுககதெணடிசசகவுஞசெயதார
பாதிரிமாாகளபபடிககுததாயமடதிருககீ
றதெயுமிநதபொததகததிலெயிடடு
ருககிறதெனனவெனறாலசபபொதகு -

அருளிசசததுயலலாதுமொலலெலலா
...திப்பதாததாக முனனும பினனும .
... படிசசொததுதபிாணட ...
... ாபுறறிததிருககிறு சிறுசைகெபை
... பியறிவாசையெனறு .

> தம்பிரான் வணக்கம் படிப்பிக்கிற தலத்திலே பிள்ளை கள் எல்லாரும் கூடினால் அவர்களை வாத்தியார் குருசு வரையச் சொல்லி கட்டளையிட்டு தாமும் ஒக்கக் குருசு வரைய வேணும்.
>
> சுத்தமான குருசின் அடையாளத்தால் எங்கள் சத்துருக் கள்...

என்பதொரு பக்கம். அடுத்த பக்கம் முகவுரை. அதில்

> அண்டிறிக்கி பாதிரியார்
> உங்கள் தமிழிலே பிரித்தெழுதவும் செய்தார்.
> தமிழ் நன்றாய் அறிந்த சில கல்விமான்களைக்
> கொண்டு தமிழுக்கு நன்றாய் இணங்கத்தக்க
> சில வார்த்தை சாலை
> தீர்த்துக் கொண்டு இடறுகள் வாராமல்
> அனேக மெல்லாம் தெண்டித்தார்
> அப்படியே - வேறொரு பாதிரியார்
> அச்சிலே நன்றாகப் பதிக்கிறதுக்குப்
> பேருகத் தெண்டிக்கவுஞ் செய்தார்
> இந்தப் பொத்தகத்திலே இடறுகள்
> இல்லையென்று சொல்லப் போகாது.

என்று அச்சிடப்பட்டுள்ளது.

இப்பக்கங்களில் நூலின் ஆண்டு, மற்றும் பக்க எண்கள் இல்லை. எனினும் இவை தரும் செய்திகள்:

தம்பிரான் வணக்கம் பிள்ளைகளுக்கு பாடநூலாய்ப் பயன்ப டுத்தப்பட்டது 'கிறித்தியானிகளுக்கான இப்படிப்பிணையை' தமி ழாக்கியவர் அண்டிறிக்கி பாதிரியார் அவர் தமிழறிந்த சிலர் உதவி யோடு தமிழாக்கப் பணி செய்தார். பிழை நேராமலிருக்க கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. எனினும் பிழை இல்லாமல் போகாது.

கிரிசித்தியானி வணக்கத்தின் மொத்த பக்கம் 132 என்கிறது.

தமிழ்க் கலைக்களஞ்சியம் (1968). 122 என்கிறது 'அச்சு பதிப்பும்' (1980) 112 என்கிறது 'இந்திய அச்சுக்கலை வரலாறு' (1985). மீண்டும் இந்த நூலின் பிற்சேர்க்கை 3 கிரிசித்தியானியின் பக்கங்கள் 127 என்று குறிப்பிடுகிறது.

கலைக்களஞ்சியக் கட்டுரையாளர் கிரிசித்யானி வணக்கம் மறு பதிப்பில் (1963) பங்கு கொண்ட, கிறித்தவர், தமிழ்ப் பேராசிரியர் ச. ராசமாணிக்கம். 'அச்சும் பதிப்பும்' ஆசிரியர் மா.சு. சம்பந்தன், அச்சுக்கலை நூல், கட்டுரை பல எழுதியவர். 'இந்திய அச்சுக்கலை வரலாறு' ஆசிரியர் புகழ் பெற்ற நூல் தொகுப்பாளர் பி.எஸ். கேசவன்.

இதுவரை கிரித்தியானி வணக்கம் 3 பிரதிகள் அறியப்பட்டுள் ளன. (1928, 1950, 1979). இம்மூன்று நூல்களும் மூன்று வெவ்வேறு நூலகங்களில், வெவ்வேறு வகையான மேல் கட்டு (Binding)களுடன் காணப்பட்டுள்ளன. ஆதலின் தான் மொத்தப் பக்கம் எவ்வளவு என்பதில் இத்தனைக் கோளாறு. அறியப்பட்ட மூன்றில் முன்னிரண் டும் காணாமல் போயின. தற்போதுள்ளது இறுதியில் கண்டதே.

'கிரித்தியானி வணக்கம்' நூலைத்தான் தமிழ் மொழியின் முதல் அச்சு நூல் என்று பல காலம் அறிஞர் எழுதினர். 'தம்பிரான் வணக் கம்' கண்டறியப்படும் வரை தமிழ் அறிஞருலகில் முதல் நூல் குறித்த விவாதங்கள் சூடு பறத்தின.

தம்பிரான் வணக்கத்தில் நூல் அச்சான ஆண்டு 1578 என போர்த்துகல், தமிழ் மொழிகளில் குறிக்கப்பட்டுள்ளன போன்றே கிரித்தியானி வணக்கத்திலும் இரு மொழிகளிலும் 1579 அச்சிடப் பெற்றுள்ளது. ஆதலின் முதல் நூல் விவாதம் அமைதியுற்றது.

தமிழ் மொழியின் மூன்றாவது அச்சுப் புத்தகம்

கன்பெசனரியோ
Confessionairo

தமிழ் மொழியின் மூன்றாவது அச்சுப் புத்தகம் கன்பெசனரியோ.

1580 - மே - 31
அய்யப்பசி 31

அளவு - 9 x 13.5 செ.மீ.
பக்கம் - 107 தாட்கள்
வரிகள் - பக்கத்திற்கு 22
தாள் - ஐரோப்பாவிலிருந்து பெறப்பட்டது.

1979-ம் ஆண்டு ஆக்ஸ்போர்டு போதலெய்ன் (Bodleian) நூலகத்தில் டாக்டர் கிரஹாம் ஷா (Graham Shaw) கன்பெசனரியோ எனும் தமிழ் அச்சு நூல் ஒன்றைக் கண்டார். கிரித்தியானி வணக்கம் (1579) என்னும் நூல் மேலிருக்க, கன்பெசனரியோ கீழிருக்க அது ஒரே கட்டாகத் தைக்கப்பட்டிருந்தது. அதைக் கண்டவர் பலரும் முதற்பகுதி நூலையே பதிவு செய்தனர். பிற்பகுதியில் ஒரு முழு நூல் இருப்பதை கவனிக்கத் தவறினர்.

எனினும் தாமஸ் ஜேம்ஸ் என்பார் 1620 லேயே இந்நூல் இருந்தது எனக் குறித்திருந்தார்.

கன்பெனரியோ மேலட்டையோடு காண்கிறது. மேலட்டையில் IHS என்னும் ஓவிய எழுத்து எழுத்தைச் சுற்றி ஒரு வட்டத்திற்குள் சூரியப் பிழம்பு. இது கொச்சி இயேசு சபையின் இலட்சினை இச்சின்னத்தை இயேசு சபை கட்டிடத்திலும் காணலாம். வட்ட இலட்சினைக்கு மேலே போர்த்துகீசிய மொழியிலும், கீழே தமிழிலும் நூலின் பெயர்.

இம்மேலட்டை ஓவியம், பின்னர் கொச்சியில் வெளியான புத்தகம் ஒன்றின் மேலட்டையிலும், கோவாவில் வெளியான (1588) புத்தகம் ஒன்றின் தலைப்புப் பக்கத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நூலின் 2-ம் பக்கம் எண்ணிடப்பட்டுள்ளது. செய்தி:

> இயேசு வகை பாதிரிமார்...
> கோம்பேசியோனயரு
>
> என்ற புத்தகம் கோவாவில் உண்டாக்கினார்கள். அப்படியே தோசங்கள் தவிர்த்து தம்பிரானுக்கேற்க நடக்கத் தக்கதாக சில விசாரங்களுடைமையானதும் எழுதினார்கள். அவையெல்லாம்... அண்டிறிக்கி பாதிரியார் தமிழிலே பிறித்தெழுதினார்.
>
> நம்முடைய நாயன் இயேசு கிறித்து பிறந்த 1580 ஆண்டு வைகாசி 31.

இதற்கு முன் ஆன தமிழ் அச்சு நூல்களில் நூல் வெளியீட்டு விவரம் இரு மொழிகளில் தரப்பட்டன. இவ்வெளியீட்டில் புத்தக அச்சு விவரம் எதுவும் போர்த்துகீசிய மொழியில் தரப்படவில்லை. இரண்டாம் பக்கத்தில் தான் தமிழில் நூலாசிரியர் பெயர், அச்சு ஆண்டு காண்கின்றன. தமிழருக்கான நூலில் தமிழ் விவரமே போதும் என கருதப்பட்டிருக்கலாம்.

எதியோப்பிய அருட்தந்தை மற்றும் கிறித்து ஊழியர்களால் தொகுக்கப்பட்டு 1557-ல் கோவாவில் அச்சிடப்பெற்ற போர்த்திகீசிய மொழி கன்பெசனரியோவின் மாதிரியாக இந்நூலை வடிவமைத்தர் அண்டிறிக்கி பாதிரியார். மேலும் கொய்ம்பேரா பதிப்பும் அவருக்கு உதவி இருக்கலாம்.


தம்பிரான் வணக்கம் கிரீசித்யானி வணக்கம் இரு நூல்களும் தமிழ் பதிப்புக்கு முன்பு போர்த்துகீசிய மொழியில் வெளியாகி இருந்தன. தமிழ்ப் பதிப்புக்கு பின்னரும் இந்திய மொழி உட்பட உலகின் வேறு மொழிகளிலும் வெளியாயின. ஆனால், கன்பெசனரியோ


CONFESSIONAIRO

கொமபெசியொனாயிரு

A

ன.



இந்திய மொழி எதிலும் மொழி பெயர்க்க அச்சிடப்படக் காணோம். 1591 (காசுவா), 1598 (நாகசாகி) ஆண்டுகளில் ஜப்பானிய மொழி யில் மாத்திரமே வெளியாயிற்று. அவ்வகையில் இந்நூல் தனித்துக் குறிப்பிடத் தக்கதாகிறது.

அண்டிறிக்கு கன்பெசனேரியோவை பதிப்பித்ததற்கு ஒரு கார ணம் உண்டு. இந்தியப் புது கிறித்தவர்களிடத்து பாவ ஒப்புதல் பெற வேண்டிய கடமையும் அவருடையதாக இருந்தது.

அண்டிறிக்கு, 1549-க்கு ஆண்டளவிலேயே, தமிழில் ஒரு 'கன்பெசனேரியோ' பதிப்பிக்க வேண்டும் என்று போர்ச்சுகலுக்கு எழுதினார். 1558-ல் மீண்டும் ஒரு நினைவூட்டு அனுப்பினார். பின்னர் 1575-ம் ஆண்டும், அந்நூல் அச்சில் வரவேண்டிய அவசி யத்தை விவரித்து அவசரப்படுத்தினார். கடற்கரை பரவ மக்களை கிறித்துவர்கள் ஆக்குவதற்கு முன்னிலும் விரிவான நூற்கள் வேண் டும் என்பதே அவரது யோசனை. அவரது 30 ஆண்டுகால முயற்சி இறுதியாய் நிறைவேறியது. நிறைவேற்றியவர் கொச்சி இயேசு சபைத் தலைவர்.

தமிழ் கன்பெசனேரியோ குறித்து அண்டிறிக்கு முதல் முயற்சி கொண்டது 1549-ல். கோவா கன்பெசனேரியோ வெளியீடு 1557. ஆதலின் தமிழ் நூல் கோவா நூலின் நேர் மொழி பெயர்ப்புதானா என்றெண்ணத் தோன்றுகிறது. எனினும் நூல் அச்சாக்க முறை கோவா நூலையேப் பின்பற்றுகிறது.

நூலின் அட்டைப் பக்கம் கீழே அச்சு தைப்புக் குறியீட்டு எழுத்து A காண்கிறது. மற்ற பிரிவுகளில் (Sections) A முதல் Q வரை, K நீங்கலாக இவ்வெழுத்துக்கள் அகர வரிசையில் காண்கின்றன. இந்த முறை கோவா வெளியீட்டைப் பின்பற்றியதே ஆகும்.

கன்பெசனரியோ கண்டறியப்பட்டது. தமிழ் அச்சுக்கலை வர லாற்றை, இன்னும் பெருமை படுத்துவதாகும். இந்நூல் அறியப்படும் வரை இதற்கு அடுத்து வெளியான அடியார் வரலாறு (அண்டிறிக்கி Flos Sanctorum 1586) தான் அதன் இடத்தில் முன்னுரிமை பெற்றுத் திகழ்ந்தது.

அடியார் வரலாறு

Flos Sanctorum
1586
பக்கங்கள் 668

தனிநாயக அடிகளார் 1954-ம் ஆண்டு வட்டிகன் நூலகத்தில் பழம் தமிழ் அச்சு நூலொன்று கண்டறிந்தார். அது 'அடியார் வரலாறு' எனப்படும் நூல். வட்டிகன் பிரதியில் நூலின் மேலட்டை, நூல், தலைப்புத்தாள் இல்லை. ஆதலின் நூலாசிரியர், ஆண்டு இரண்டும் அறுதியிட முடியவில்லை. எனினும் பிரிட்டிஷ் நூலகம் நடத்திய 'கீழ்த்திசை சுவடிகள்' அச்சுக் கண்காட்சி (1978 - 79).

> 1586 அண்டிறிக்கி பாதிரியாரின் மிகப்பெரும் நூல் புன்னைக் காயல் அச்சு கிரிசித்தியானி வணக்கம் நூலில் காணும் அச்செழுத்து

என்று இந்த வட்டிகன் பிரதியின் நகலைக் காட்சிப்படுத்திற்று.

இந்த நூலின் மொத்த தாட்கள் 333, பக்கங்கள் 666 என்று அறிவித்தார் தனிநாயகம். இந்நூலின் நகலொன்று தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் காக்கப்படுகிறது. அதிலுள்ள பக்கங்கள் 1+5+(331x2) = 668.

அடியார் வரலாற்றின் முதற் பக்கம் தைய (தை மாதம்) எனத் தொடங்குகிறது. தொடர்ந்து ஒவ்வொரு பக்கத்திலும் தமிழ் மாதம் அச்சிடப்பட்டுள்ளது. அந்தப்

> நம்முடைய நாயன் இயேசு கிறித்துப் பிறந்த எட்டாம் நாள் அவர்க்கு சன்னத்திட்டதும், அவர்க்கு இயேசு என்று திருப்பெயரிட்டதும் வருமாறு

என்று தொடங்குகிறது.

லாதய.

ஏ நமமுடையநாயன் செசுககிறிசிததுப
பிறநத வெட்டாருளளவரகுசசுதாாத
தி——ரூபவரகு வெசுவெணததிருப
பெரிட்டதுயவருபாய

நமமுடையநாயன் செசுககிறிசிததுபிறநதவெட—
—ாருளினாடுபா லொருநாளியிலெநகரு
வெயாடி செசுயானநதிடு விததுககொணடுதம
முடையவதிாருசிநதது—ஙகுரா.

ஏ மூணாஞசுககுசெருதமாரகுய——ாணமாரகநதமபிாான
வாகளுககுககட——ழைபிட——மாககமொழியுவெ
ரலெஅநத யாரக மபடுபாலதககுநலலமாரகம,எனறால.
நமமுடையநாயன் செசுககிறிசிதது பாடுபடடுசசெதது
விாகதுவானஙகளிலெறி[அபொசுதததொல]மாணைக
கொணடு வடுலொகரசுககிறிசிததியானமாரகமரிவிதததர
பிலாடஙகிாசிததயாயினமாரகததினபடி யெயெலலாருமம
ந——ககவெ உமொழிநதுகுதமாாமாரகததினபடி
யெநட——ககரதுதமபிாாஅககுடையமலல.
ஏ மூதலானதகபபன[அதம]செயததொழசமவணடைய
பிதாயழிபுளள வாகளுக கெலலாமவநதுசமபுவிததிது
அநததொழசம[பெகூாதுவெஙாிசனவுல]ளனஅசொல
லபபடுமநததுதொழகநத வெணுமெனவதமபிராளுரா.
குதமாாமாரகததிலான பிளளிகளுக கெலலாம பிறநத
வெட——ாருளளஞசுனனததி——கக——ழைபிட——ாா
சுனனததி——கக——ழைபிட——து அநதததொழசந
திருதிரமுகாநதிரமணதிரவெ வெரசிலமுகாநதிாஙகளு
முணடு அநததொழசநதிககுததகாககசுனனததி——ட
தெயுண——ாளும நமமுடை——யநாயனசெசுககிறிசிதது
முதலான தகபபனடுசெயதொழசததுககுமவணடிக
குளுசிலெபாடுபடடுசெசாருமழவுமொருதரககுசொர
கததுககுபடுபாகவி——மவநததில ஸயநததொழசமெம
லொபெரிலெபுமவநதுசமபு விததநாஸுமநமமுடைய
நாயனசெசுககிறிசிததுவினபெரிலெவநதுசமபுவிதததில
ஸயவா.சு.பரியாள ஸமாரதில மஞததாபிர புததி யிலலா
மலசசனிததுதொழிநதுமரபபடியலல அவாபெரிலெ

A யநத

அடியார் வரலாற்றில் முன்னுரை குறிப்பிடத்தக்கது. அது ஸ்பேனிய மொழியில் அமைந்திருப்பது ஒரு வித்தியாசம். இந்நூலும் ஜோ பெரியோ கொல்லத் துண்டாக்கின எழுத்துக்களால் தான் அச்சிடப் பெற்றுள்ளது. இதன் அச்சு புன்னைக்காயல் என்பது பொதுக் கருத்து. கொச்சியில்தான் என்பவர் சிலர்.

அடியார் வரலாறு, வெளியீட்டின்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதாம். 'பிரதிகள் பெற விரும்பிய மக்களால் ஒரு கலகமே உண்டாயிற்று' என்று குறித்துள்ளார் பாதிரியார் சௌஜா (Souza)

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்புவரை, அடியார் வரலாறு தான் தமிழ் அச்சின் மூன்றாவது வெளியீடு என்று எண்ணப்பட்டது. பலரும் அவ்வாறே எழுதினர். ஆனால், கன்பெசனரியோ கண்டுபிடிப்பு இந்நூலைப் பின்னுக்கு தள்ளிவிட்டது. எனினும், 16-ம் நூற்றாண்டின் தமிழ் அச்சு நூல்களில் இதுவே பெரியது. அக்காலத்து இந்திய மொழி அச்சு நூல்களிலும் பெரியது அதுவே.

தமிழ் அச்சு நூல்களில் கிறித்துவின் நாமம் போதனைகள் தவிரவும் இயேசுவின் வரலாறு, கிறித்துவ அடியார் பலரது வரலாறு என விரிந்த பெருநூல் அது.

முதல் அச்சு நூலுக்கு முன்னோடிகள்

கார்ட்டிலா

லூசோ சமய வினாவிடை

1544

பக்கம் - 38 பக்கம்
வரிகள் - பக்கத்திற்கு 23
அச்சு - லிஸ்பன் (Lisbon)

1954-ம் ஆண்டு லிஸ்பன் நகரில் 'கார்டிலா' எனும் தமிழ் நூலொன்றைக் கண்டார் தனிநாயகம் அடிகள். தமிழ் மொழியின் முதல் அச்சு நூலான அதனை முதன் முதலில் தமிழுலகிற்கு அறிவித்தவரும் அவரே. (முதல் அச்சேறிய தமிழ் நூல்கள், கல்கி தீபாவளி மலர் 1958).

'லூசோ தமிழ்ச் சமய வினாவிடை' என்றழைக்கப்படும் அந்த நூலின் முழுப் பெயர்

De Cartilha de litura doctrina in lingur
Tamule Portugues


உலக அச்சியல் வரலாற்றுக்கு அரும் சான்றான கார்ட்டிலாவின் பிரதி ஒன்றே ஒன்றுதான் அறியப் பெற்றுள்ளது. அப்பிரதி எவோரா (Evora) கிறித்துவ மடாலயத்திலிருந்து விற்பனை மூலம் லிஸ்பனுக்கு வந்து சேர்ந்தது. இன்று இந்நூல் லிஸ்பனுக்கு அருகேயுள்ள பெலம் (Belem) மானிடவியல் அருங்காட்சியகத்தில் காக்கப்படுகிறது.

கத்தோலிக்க 'செபங்களும் கற்பனைகளும்' அடங்கியது கார்ட்டிலா தமிழிலும் அதற்கு நேர் போர்த்துகீசிய மொழியிலும் ஆக்கப் பட்டுள்ள நூல் அது. அதில் காணும் தமிழின் ஒலிவடிவம் தான் தமிழ். வரி வடிவம் போர்த்துகீசிய மொழி.

Car 75 41.6



Cartilha que cõtẽ breuemẽte ho q̃ todo christão deue aprẽder pera sua saluaçam. A qual el rey dom Joham terceiro deste nome nosso senhor mandou imprimir ẽ lingoa Tamul e Portugues cõ ha decraraçam do Tamul por cima de vermelho.



[illegible]. Remissionem peccatorum. Carnis resurrectionem. Vitam eternam. Amen.

கார்ட்டிலாவின் தமிழ் எழுத்து பெரியது. போர்த்துகீசிய எழுத்து சிறியது. கார்ட்டிலா கறுப்பு சிவப்பு இரு வண்ணங்களில் அச்சிடப் பெற்றுள்ளது. தமிழ் கருநிறம், தமிழுக்கு நேராக போர்த்துகீசிய சொற்கள் செந்நிறம்.

நூலின் நாலாம் பக்கம் சிறப்புமிக்கது. அது தமிழ் உச்சரிப்பு முறையை விளக்குகிறது.

நூலின் அச்சு அமைப்பைக் கண்ட தனிநாயகம் 'நிழற்படம் எதுவும் அதன் திறமையைக் காட்டும் வன்மை அற்றது' என வியந்தார். மேலும் நூலின் உள்ளடக்க உத்திகளைக் குறித்து

> இவ்வாறு கற்பிக்கும் புதுமுறைகளையும் இரு நிறங்களையும் திறமையான எழுத்துகளையும் கொண்ட நூலை ஐரோப்பிய அச்சக வரலாற்றிலேயே காண்பது அரிது

எனப் புகழுரை சூட்டினார்.

கார்ட்டிலாவை அச்சிடப் பணித்தவர் போர்த்துகல் அரசர் மூன்றாம் ஜோவா (Joa III). நூலின் முன்னுரை,

> வின்சென்ட் நாசரெத்,
> யோஜ் காவல்கோ,
> தாமஸ் குரூஸ்

ஆகிய மூன்று பெயர்களைக் குறிப்பிடுகிறது. இவர்கள் தமிழகக் கடற்கரைத் தமிழர்கள், கார்ட்டிலா மொழியாக்கத்திற்காக போர்ச்சுக்கலுக்கு அழைக்கப் பெற்றவர்கள. மேற்பார்வையும் தொகுப்பும் ஜோன் வில்லா கோண்டி. கோண்டி இலங்கைக் கிறித்துவர். இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் கிறித்துவ போதனைகள் செய்து வந்தவர். இலங்கை அரச குடும்பத்தின் முன்பு திருக்குறள் உரை நிகழ்த்திய, தமிழ் மொழித் திறனாளி.

கார்ட்டிலாவின் மொத்தத் தாட்கள் 38. அவை புத்தகமாகத்

தைக்கப்படாமல் தனித்தனியே இருந்தன. அதனால், அதனை புத்தகம் அல்ல என்பர் சிலர். கார்ட்டிலாவின் தமிழ் ரோமானிய வரிவடிவத் தமிழ். அது நம் தமிழ் அல்ல என்பர் சிலர். என்றாலும்...

இந்திய மொழிகள் யாவற்றிலும் தமிழ் மொழியே முதல் முதலில் அச்சானது என்ற வரலாற்றுப் பெருமையை வழங்குகிறது கார்ட்டிலா.

இந்திய மொழிகளில் ஒன்றுக்கு மேலான வண்ணங்களில் முதன் முதல் அச்சு பெற்றது தமிழ் ஒலி வடிவில் ஆன கார்ட்டிலா.

இந்திய நாட்டு எல்லைக்கு வெளியே முதல் முதல் அச்சான இந்திய மொழி (தமிழ்) அச்சு கார்ட்டிலா.

தமிழ் அச்சு வரலாறு கார்ட்டிலாவில் தான் தொடங்குகிறது. ஏன் இந்திய அச்சு வரலாற்றுக்கும் அதுவேதான் தலை எழுத்து.

கோவா தமிழ் வெளியீடு 1577

இந்திய அச்சுக்கலை கோவாவில் 1556ல் தொடங்கிற்று.

கோவாவின் முதல் நூல் சமயக் கருத்துகளடங்கிய சிறு நூல் (Theses and other things ——— 1556) கோவா அச்சகம் போர்த்துகீசிய மொழியில் நூல் வெளியிட்டு வந்தது. கோவாவில் 1576-77ல் தமிழ் அச்செழுத்து ஆக்கப்பட்டிருக்கிறது. அவை 1578 கொல்லம் தம்பிரான் வணக்கத்தின் இறுதிப்பக்கத்தில் காட்டப்பட்டன.

அவ்வெழுத்துக்கள் மாதிரி (sample) எழுத்துகள் என்பர் சிலர். கொல்லம், அச்சுப் பணிகளுக்கு முன்னதாகச் செய்யப்பட்ட சோதனை (Trial) முயற்சி என்பர் சிலர்.

ஆனால் 1577ல் கோவாவில் ஒரு தமிழ் நூல் அச்சிடப்பட்டதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அந்நூல் கோவா எழுத்திலேயே

அமைந்திருக்கும் வாய்ப்பும் உண்டு.


கோவா அச்சு நூல்களைப் பட்டியலிட்ட பியரி தெசாம்ப் (Pierre Deschamps) என்பார் அங்கே 1577ல் தமிழில் அச்சானதொரு நூலைக் குறிப்பிட்டார். அதன் பிரதியொன்று லெய்டன் பல்கலைக்கழக நூலகத்தில் உள்ளதென்றார் அவர். மொழியியல் அறிஞர் காலிகர் (Scaliger) என்பவர் லெய்டனுக்கு வழங்கிய நூல்களில் ஒன்றாக 1577 கோவா தமிழ் வெளியீட்டைக் குறிப்பிட்டிருந்தார். ஸ்பேன்ஹைம் (Spanheim the younger). 1574-ல் இந்தியா வருகை புரிந்த வாலிக்னானோ, அண்டிறிக்குப பாதிரி இருவரும் எழுதிக்கொண்ட கடிதங்கள் 1577-ல் கோவாவில் ஒரு தமிழ்நூல் அச்சிடப்பட்டதை உறுதி செய்கின்றன என்பார் விக்கி (Wicki Josephus). 1979-ல் கொன்பெசனேரியோ (1580) கண்டுபிடித்த கிரஹாம் ஷாவும், 1577-ன் கோவா தமிழ் வெளியீட்டை உறுதி செய்கிறார்.


● ஜோசப் காலிகர் (Joseph Juste Scaliger) பிரெஞ்சு கிறித்துவர். கீழ்த்திசை வரலாற்று அறிஞர்.

1572 புனித பார்த்தலோமியோ தினத்தன்று ஆயிரம் பேருக்கு மேலாகக் கொல்லப்பட்ட படுகொலைக்குத் தப்பி, இறுதியாக 1593ல் லெய்டன் சேர்ந்தார். அவர் தன்னிடமிருந்த ஹீப்ரு, சிரிய, அராபி, எதியோபிய நூல்கள் யாவற்றையும் லெய்டன் பல்கலைக் கழகத்திற்கு அன்பளித்தார். அவறறில் ஒன்றே தெசாம்பு, ஸ்பேன்னஹம் இருவரும் குறிப்பிடும் கோவா தமிழ் நூல் 1577.

காலிகரின் நண்பர் இருவர் பாரிஸ் அரசு நூலகத்தில் பணியாற்றினர். அவர்கள் வழியே, கோவா தமிழ் வெளியீடு அவருக்குக் கிடைத்திருக்கலாம் என்பார் கிரகாம் ஷா.

லெய்டனில் காணப்பட்டதாகக் குறிப்புகள் உள்ள கோவா தமிழ் நூல் 1577, பின்னர் 1716 முதல் காணப்பெறவில்லை. இந்த நூல் கண்டறியப்படும்போது, தமிழ் அச்சுக்கலை வரலாறு மீண்டும் திருத்தி எழுதப்பெறும் 78, 77-ன் இடைவெளி ஓராண்டாக இருக்கலாம். ஆனால், ஒரே நிமிடம் எனினும் கூட மூத்தவன் எனும் பெருமை எவ்வளவு பெரியது.


அமெரிக்கா
ஹார்வேர்டு
லிஸ்பன்



தமிழ் முதல் அச்சு நூல்கள்
காணக்கிடைக்கும் இடங்கள்

தமிழ் மொழியின் முதல் அச்சுப் புத்தகங்களும் இன்று அவை காணக் கிடைக்கும் இடங்களும்

1.	தம்பிரான் வணக்கம்	1578	(கொல்லம்)	ஹார்வேர்டு அமெரிக்கப் பல்கலைக் கழகம்
2	கிரித்தியானி வணக்கம்	1579	(கொச்சி)	போதெலய்ன் ஆக்ஸ்போர்டு நூலகம்
3.	கன்பெசனரியோ	1580	(கொச்சி)	போதெலய்ன் ஆகஸ்போர்டு நூலகம்
4.	அடியார் வரலாறு	1586	(புன்னைக்காயல்)	வட்டிகன் நூலகம்
5.	கார்ட்டிலா (ரோமன் தமிழ்)	1554	(லிஸ்பன்)	பெலம் அருங்காட்சிய கம், லிஸ்பன் போர்சுகல்
6.	கோவா வெளியீடு (தலைப்பு உறுதிப் படவில்லை)	1577	(கோவா)	எங்கே? எங்கே? எங்கே?

கண்ணிற்கண்டும் கிறிஸ்தியானி வணக்கத்தின் இரு பிரதிகள் காணாமற் போயின. தமிழ் மொழியின் இரு அச்சு நூல்களை யாரோ திருடக் கொடுத்து ஏமாந்து போயிற்று தமிழ் வரலாறு. கோவா முதல்நூலும் பழம் பொருள் பதுக்குவோர் எவரிடமேனும் உளதோ என்னவோ?

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம், ஹைதராபாத் அமெரிக்க ஆய்வுகள் ஆய்வு மையம் இங்கே தமிழ் மொழியின் முதல் அச்சு நூல்களின் நகல்கள் (Xerox, Microfilm) காணலாம். மறு அச்சு எதுவும் மூல நூலின் காலம் செறிந்த பழமையைக் காட்ட வல்லதல்ல.

இந்திய மொழிகளின் முதல் அச்சு நூல்கள்

	முதல் அச்சு நூல்
தமிழ் (ரோமன்)	1554 லிஸ்பன்
தமிழ்	1577
வங்கம் (ரோமன்)	1743 லிஸ்பன்
வங்கம்	1773
இந்தி	1802
மராத்தி	1805
சமஸ்கிருதம்	1808
தெலுங்கு	1812
பஞ்சாபி	1812
அசாமி	1815
கன்னடம்	1817
காஷ்மீரி	1821
நேபாளி	1821
தோகிரி	1826
மணிப்புரி	1827
மலையாளம்	1829

இந்திய மொழிகளில், வட்டார வழக்கு, மற்றும் சிறிய மொழிகளில் முதல் அச்சு வருமாறு:

ஆவதி	1820		
கண்ணோஜி	1821	மார்வாரி	1805
காசி	1816	மாகதி	1826
கார்வலி	1920	லோக் (பிகானிர்)	1820
குர்மாணி	1824	மேவாரி	1815
பாஹலி	1821	ஜெய்ப்புரி	1815
பிரஜ்பாஷா	1822	ஹைரத்தி	1821
புஸ்ட்டு	1818		
பைலோசி	1815		
பொட்டியா	1826		

முதல் அச்செழுத்து
முதல் பைபிள் அச்சு

அசாமி	1815	1819
இந்தி	1802	1806
உருது		1743
ஒரியா		1809
கன்னடம்	1817	1812
காஷ்மீரி	1821	1821
குஜராத்தி		1809
சமஸ்கிருதம்	1808	1808
தமிழ்	1577	1714
தோகிரி	1826	

தெலுங்கு	1812	1812
நேபாளி	1821	1821
பஞ்சாபி	1812	1815
மலையாளம்	1829	1829
மணிபுரி	1827	
மராத்தி	1805	1805
வங்கம்	1773	1800

முதல் அகராதி

முதல் இலக்கிய நூல்

அசாமி	1839 ராபின்சன்	அசாமிகிதாப் மஞ்சரி 1845
இந்தி	1802 ஜில்கிரிஸ்ட்	
உருது	1773 பெர்குசன்	உருது சாஅதி குலிஸ்தான் (மொ) 1802
ஒரியா	1812 மோகன் பிரசாத் தாகூர்	
கன்னடம்	1832 ரிவிய	
காஷ்மீரி	1872 எல்ம்ஸ்கி	
குஜராத்தி	1808 கோசா	
சமஸ்கிருதம்		சமஸ்கிருதம் ருதுசம்ஹாரம் 1797
சிந்தி	1836 வாதென்	
தமிழ்	1779 பேப்ரிக்ஸ்	தமிழ், திருக்குறள் 1812
தெலுங்கு	1835-39 மோரிஸ்	
நேபாளி		

பஞ்சாபி	1854 நியுடன்	
மலையாளம்	1846-49 பெய்லி	
மராத்தி	1810 கேரி	மராத்தி 1814 கிஸ்காசன் புட்டிசி
ராஜஸ்தானி	1896	
வங்கம்	1793 உப்ஜோன்	வங்கம நைதன் பஞ்சிக 1795-96

முதல் பத்திரிகை

அசாமி	அருணோதய் 1846
இந்தி	உதந்ந் மார்டண்ட 1826
உருது	ஜான் கி ஜான் நியுமா 1822
குஜராத்தி	மும்பாய்கி சமாச்சார் 1822
தமிழ்	தமிழ் பத்திரிகை 1831
நேபாளி	கோர்கா பாரத் ஜீவன் 1886
மலையாளம்	விக்ஞான நிக்ஷேபம் 1840
மராத்தி	பம்பாய் தர்பன் 1832
வங்காளம்	திக்தர்பன 1818

இந்தியாவில் அச்சான அயல்நாட்டு மொழிகள்

போர்த்துகீசு, லத்தீன், ஆங்கிலம், பிரெஞ்ச், டச்சு, அரபு, பாரசீக மொழி, சீனம், மலாய், தாய், பர்மிய, ஜப்பான், ஜாவனிஸ், மாலத்தீவு மொழி, சிங்களம் இப்படி இன்னும் பல.

● சாகித்ய அகாதெமியின் இந்திய மொழிகளின் இலக்கிய வரலாற்று நூல்கள் பி.கே. சென் வங்க மொழியின் முதல் அச்சு நூல் பட்டியல் DP Pattaranayak தொகுத்த Indian Languages Bibliography, New Delhi, 1967 ஆகிய நூல்களிலிருந்து திரட்டப்பட்ட பட்டியல்.

தேர்ந்த ஆய்வுரை/நூற்பட்டியல்

தனி நாயகம் அடிகள் முதல் அச்சேறிய தமிழ் நூல்கள் கல்கி தீபாவளி மலர் 1958.

மா.சு. சம்பந்தம் அச்சும் பதிப்பும், 1980.

BOXER C.R: A tentative check-list of Indo-Portuguese imprints, 1556-1674.

BURNS MARGARITA : The Indian Press, 1940.

BRITISH LIBRARY : 1978-79. Exhibits on early printing in India.

CASLETI, J : Fr Henrique Henriquez. Tiruchirapalli, 1926.

DUVERDIER MONSEIUR GERALD : Rare Tamil Copies in European Countries, 1981.

KESAVAN BS. : History of Printing and Publishing in India, New Delhi 1985.

LEO PROSERPIO : The First printing press in India. New Review. Oct 1935.

PRIMROSE, JAMES B : The first press in India and its printer. Library, 4th Series XX. 1939.

PRIOLKAR A.K: The printing press in India / its beginnings and early development - Bombay, 1958.

RAJAMANNIKKAM, S : Padre Henrique Henriquez, the father of the Tamil press. The first International Conference of Tamil studies, Kuala Lumpur, 1958.

RODELES, C G : Early Tamil printin ˀ in India. The Journal of the Asiatic society of Bengal, Apr 1913.

SCHURHAMMER, GEORG AND COT TRELL, GW : The first printing in India characters. (Harvard College Bulletin, 1952).

THANI NAYAGAM, XAVIER, Tamil manuscripts in European libraries. Tamil Culture, Oct. 1934.

WARREN, WH : Early Tamil printing : Memoirs of the Madras library association, Madras, 1941.

WICKI JOSEPHUS : Documenta Indica, 1948.

Regd No. 88/1975

சேலம் மாவட்டஓவியர், எழுத்தாளர் மன்றம் 1975ம் ஆண்டு தொடங்கப் பெற்றது. 1975, '76, '77, '78, '93, '94ம் ஆண்டுகளில் மாநில, தேசிய அளவுகளில் ஓவியக் கண்காட்சிகள் நடத்திற்று. ஓவிய ஆர்வலர், கலைஞர், அறிஞர் ஆகியோரை சேலத்திற்கு வரு வித்து ஓவியக் கலை கருத்தரங்குகள் (1995, '76, '93, '94) பல நடத்திற்று. இம்மன்றம்தான், தமிழகத்தில் பொதுமக்கள் தொடங்கிய முதல் அருங்காட்சியகமான சேலம் அரசு அருங்காட்சியகம் தொடங்க கால்கோளிட்டது.

ஓ.எ.ம.வின் முதல் வெளியீடு ஒரிசா எழுத்தாளர் ரிசிகேஷ் பண்டாவின் ஏழு கார்ட்டூன்களும், ஒரு வண்ண ஓவியமும் சிறுக தைத் தொகுப்பு. அடுத்து வரவிருப்பவை: (1) 'சேலம் மாவட்ட கலை இலக்கியச் செல்வங்கள்', (2) இந்திய மொழியின் முதல் கலை இலக்கண நூலான 'விஷ்ணு தர்மோத்திரம்' சமஸ்கிருத நூலின் தமிழ் மொழியாக்கம்.

தமிழ் மொழியின் முதல் அச்சுப் புத்தகமான 'தம்பிரான் வணக் கம்' நூல் வெளிவருவதற்கு தாராளமான நிதி உதவி அளித்த திரு. லவ்-ஓ. ஏ.கே. நாகராஜன் அவர்களுக்கு சேலம் ஓவியர் எழுத்தாளர். மன்றம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடன்

தமிழ்நாடன் சேலம். கவிஞர் வானம்பாடி. புதுக்கவிதை இயக்க முன்னோடிகளில் ஒருவர். ஒரு ஓவியர். சேலம் மாவட்ட ஓவியர் எழுத்தாளர் மன்ற செயலர். பல ஓவியக் காட்சிகள் நடத்துவித்தவர். அவரது நட்சத்திரப் பூக்கள் தமிழ் மொழியின் முதலாவது சித்ர கவிதா தொகுதி.

தமிழ்நாடன் ஒரு வரலாற்று ஆய்வாளர் - சேலம் மாவட்டம் சில ஆய்வுகள் தொகுப்பாசிரியர். கர்னல் ரீடு அறிக்கை (1800), பாரதிதாசனின் குமரகுருபரன் கையெழுத்துப் படி இவற்றைக் கண்டறிந்து பதிப்பித்தவர் - கொங்கு நாட்டு மாவட்டங்களின் (சேலம், தருமபுரி, நீலகிரி, பெரியார்) வரலாற்று பண்பாட்டு ஆய்வரங்குகள் பல நடத்தியவர் - வர இருக்கும் நூல்கள். தமிழ்நாட்டுப் பழங்குடி மக்கள் (தொ), தாரமங்கலம் கெட்டி முதலி அரச வம்சம் (தொ), மற்றும் சேலம் மாவட்ட கலை இலக்கியச் செல்வங்கள்.

தமிழ்நாடன் நாவலாசிரியரும் கூட. வெளியானவை 'வேலி கள்', 'சாரா'. மொழிபெயர்ப்பாளர் தமிழ்நாடன், சீன, ஜப்பானிய, பிலிப்பைன்ஸ், ஆப்ரிக்க கவிதைகள் பலவற்றை தமிழாக்கம் செய்துள்ளார். நூல்கள் காதலுக்குப் பல முகங்கள் (அமெரிக்க கவிதை). மனுதர்மம், சாணக்கியனின் அர்த்த சாத்திரம்.

இயற்கைப் பாதுகாப்பு ஆர்வலர். தமிழ்நாடன் அகில இந்திய சூழ்நிலைப் பாதுகாப்பு பற்றிய தேசிய முகாம்கள் நடத்தியுள்ளார். சேலம் மாவட்ட இயற்கைக் கழக நிறுவனங்களில் அவரும் ஒருவர்.

தமிழக அரசின் பாவேந்தர் விருதும் இந்திய அரசின் சிறந்த கலைத்துறை கற்பிப்பாளர் விருதும் பெற்றவர்.

லவ்-ஓ. ஏ.கே. நாகராஜன்

சேலத்தில் ஒரு எளிய குடும்பத்தில் பிறந்தவர். பெற்றோர் திரு.ஏ.காசிராஜன் - திருமதி தனபாக்கியம். குடும்பத் தொழில் கைத்தறிக் கருவிகள், கைத்தறி ஜமக்காளம் விற்பனை. தம் உழைப் பால் முன்னேறிய ஏ.கே நாகராஜன் லவ்-ஓ, குளிர்பான நிறுவனங்க ளின், சேலம், தருமபுரி மாவட்டங்களின் துணைத் தயாரிப்பு மற்றும் விநியோகஸ்தர். இன்று 'லவ்-ஓ' அவர் பெயருக்கு அடைமொழி ஆயிற்று.

பொதுநலத் தொண்டரான இவர் ஒவ்வொரு ஆண்டும் ஏழை எளிய மக்களுக்கு மருத்துவ உதவியும் மற்றும் பொருட் கொடையும் வழங்குகிறார். அண்மையில் உடல் ஊனமுற்ற மாணவர்க்காக, படுக்கை மற்றும் இருக்கைகள் பல அன்பளித்தார்.

தெய்வபக்தி மிக்க இவர் சேலம் அருள்மிகு சுகவனேசுவரர், அருள்மிகு ராஜகணபதி திருக்கோயில் ஆகியவற்றின் அறங்காவலர் குழுத் தலைவராக விளங்குகிறார். பல்வேறு கோயிற் திருப்பணிக ளில் பங்கு கொள்கிறார்.

அ.இ.அ.தி.மு.க. தோன்றிய காலந்தொட்டு, அதன் உறுப்பின ராக உள்ள லவ்-ஓ. நாகராஜன், இன்று சேலம் மாநகர அ.இ.அ.தி. மு.க. செயலாளராக தொண்டாற்றி வருகிறார். தஞ்சையில் நடைபெ றும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக்கான அவரது அன்பு வெளியீடு

- தமிழ் மொழியின் முதல் அச்சுப் புத்தகமான இந்தத் **''தம்பிரான் வணக்கம்''** (1995).



THE FIRST PRINTED TAMIL BOOK

PUBLICATION SPONSORED BY
LOVE-O AK NAGARAJAN Salem